Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | கார்த்திகை 25 திங்கட்கிழமை (10.12.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 071

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)

















# 13 ஆவது திருத்தம் நீக்கம் சுதந்திரக் கட்சியும் உடன்படாது

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்கக்கூடாது என்பதே தமது கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாடு என்று ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி விமல் வீரவன்ச தரப்பினருடன் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட உயர்மட்ட பிரமுகர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் இருந்தாலும் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு தொடர்ந்தும் அதனை முன்னெடுக்க வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்பதை விமல் வீரவன்ச தரப்பினருக்கு தாம் விளக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குள் இது தொடர்பில் ஏற்பட்டுள்ள வாதப்பிரதிவாதங்கள் காரணமாக, 13 ஆவது திருத்தம் நீக்கப்பட்டுவிடும் என்று எவரும் அஞ்சத்தேவையில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல பங்காளிக் கட்சிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## சேவை நீடிப்பை கோராமல் நாடு திரும்பும் தயான் ஜயதிலக

பிரான்சுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் தயான் ஜயதிலக, ஜனாதிபதியிடம் சேவை நீடிப்புக் கோராமலேயே நாடு திரும்ப முடிவு செய்துள்ளார். இலங்கையின் முக்கிய இராஜதந்திரிகளில் ஒருவராகக் கருதப்படும் தயான் ஜயதிலக பாரிசில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, இலங்கைக்கான தூதுவராகப் பணியாற்றி வருகின்றார்.

எனினும் மேலும் ஒரு ஆண்டு அவர் சேவை நீடிப்புக் கோரிப் பெறமுடியும் என்றபோதும், அதற்கு விண்ணப்பிக்காமல் வரும் ஜனவரி மாதம் முற்பகுதியில் அவர் கொழும்பு திரும்பவுள்ளார். கடந்த மார்ச் மாதம், ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, தயான் ஜயதிலக வெளியிட்ட கருத்து அரசாங்க மட்டத்தில் பலத்த சர்ச்சையை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதுநலவாய நாடுகள் விசாரணை

### ஐ.தே.க. கோரிக்கை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் விசாரணை செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.


பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவிடம், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு நீதிமன்றத்தை கட்டுப்படுத்த முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளிலிருந்து தெளிவாக விலகிச் செல்கின்றமை அம்பலமாகியுள்ளது என மங்கள சமரவீர சுட்டிக் காட்டியுள்ளார்.

பழிவாங்கும் நோக்கில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் சுமத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## அரசைக் கவிழ்ப்பதற்கு மக்கள் இடமளியார்

### ஜனாதிபதி தெரிவிப்பு



தாம் கட்டியெழுப்பிய அரசாங்கத்தை பொதுமக்கள் ஒருபோதும் கவிழ்ப்பதற்கு இடமளிக்க மாட்டார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட புதிய நகர மண்டபத் திறப்பு விழாவின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிறைவேற்று அதிகாரம், அரசியல் அமைப்பு மற்றும் நீதிமன்றம் ஆகியன மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே செயற்படவேண்டும். எந்தவொருவரினாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத வகையிலும் சுய கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலும் செயற்படுவதற்கு நீதிமன்றங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நிறைவேற்றதிகாரம், அரசியலமைப்பு மற்றும் நீதிமன்ற நட

19 ஆம் பக்கம் பார்க்க

## மாநகரசபை சிற்றூழியர் நகரில் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலக வீதியிலுள்ள கழிவு நீரோடையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. தந்தை செல்வா நினைவு சதுக்கத்திற்கு அருகில் உள்ள நீரோடையினுள் இச்சடலம் காணப்பட்டது. நேற்றுக்காலை வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டோரால் இச்சடலம் குறித்து யாழ். பொலிஸாருக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் ஒத்துழைப்பில்லை மட்டுப்படுத்தப்பட்டளவு எண்ணெயை ஈரானிலிருந்து பெறமுடியாத நிலை

ஈரானிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்டளவு எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ள போதிலும், எண்ணெய் இறக்குமதி செய்யமுடியாத சிக்கலுக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளும், காப்புறுதி நிறுவனங்களும் ஒத்துழைக்க மறுத்ததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஈரானிடம் இருந்து குறைந்தளவு எண்ணெயை இறக்குமதி செய்ய இலங்கை உள்ளிட்ட 20 நாடுகளுக்கு, அமெரிக்க அரசாங்கம் கடந்த வெள்ளியன்று அனுமதி அளித்தது.

இதன்படி, கடந்த யூன் மாதம அறிவிக்கப்பட்ட இந்தச் சலுகை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஈரானுடன் கடன் பணப்பரிமாற்றங்கள் மற்றும் காப்புறுதித் தொடர்புகளைப் பேணுவதால் தாம் தண்டிக்கப்படுவோமோ என்று வங்கிகளும், காப்புறுதி நிறுவனங்களும் அச்சம் கொண்டுள்ளன.

இதனால், ஈரானுடன் பணப் பரிமாற்றங்களைப் பேணும் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களை தண்டிக்கமாட்டோம் என்று அமெரிக்கா வாக்குறுதி அளிக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழு செயற்பாடு முடிவடைய மேலிடத்து உத்தரவே காரணம்

### என்கிறார் விஜித ஹேரத்

மேலிடத்திலிருந்து வந்த திடீர் உத்தரவிற்கு அமையவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன என பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக்குழுவின் உறுப்பினரான ஜே.வி.பி.யின் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அடுத்த ஜனவரி வரை கொண்டு செல்ல இணக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் புத்தூரில் 15 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ். புத்தூர் கிழக்குப் பகுதியிலிருந்து 15 பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 15 பேரும் நேற்றையதினம், அவர்களது வீடுகளுக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்குரிய உடு

19 ஆம் பக்கம் பார்க்க

# அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவு அட்டைகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவுத் தொகையான ஆயிரம் ரூபாவை உரிமையாளர்கள் அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் 70வயதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த யூன் மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த செப்ரெம்பர் மாதம் ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுத் தொகையான ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருந்தது. நிலுவைத் தொகையுடன் நவம்பர் மாதக் கொடுப்பனவு வழங் கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நவம்பர் மாதக் கொடுப்பனவுக்குரிய அட்டைகள் தயாரிக்கப்பட்டு அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு அட்டையை கிராம சேவையாளரிடம் உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்திற்கு முன்னர் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்ற அஞ்சல் அலுவலகங்கள் உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளலாம்.

தென்மராட்சி பிரதேசத்தில் 1516 முதியோர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# வீதிக்கு மின் இணைப்பு அறங்காவலர் சபை நிதி உதவி

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினால் நயினாதீவு மகாவித்தியாலய ஸ்ரீ முருகன் வீதிக்கு மின் இணைப்புக்காக இரண்டரை இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளனர்.

முன்னர் இவ்வீதிக்கு மின் இணைப்பு இல்லாமையால் இரவு வேளைகளில் இவ்வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது இவ்வீதிக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதால் சிரமமின்றி பயணம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நயினாதீவுப் பிரதேசத்தில் மின் கம்பங்கள் மரத்தில் முன்னர் போடப்பட்ட நிலையில் தற்போது சில வீதிகளுக்கு கொங்றீற் தூண்கள் போடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(175)

# முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு வடக்கில் மட்டுமே இடம்பெறுகிறது

## ஆளுநர் சந்திரசிறி

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளிகள் தொடர்பான வேலைத்திட்டங்கள் பல 2009 ஆம் ஆண்டுமுதல் முன்னெடுத்து வருகின்றோம். ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையின் கீழ் முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவுகளை வங்குகின்றோம். வடமாகாணத்தில் மட்டும்தான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது. என்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.



யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுநடைபெற்ற வடமாகாண முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியிலும் கலைநிகழ்வுகளிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமாகாணத்தில் 46000 முன்பள்ளிச் சிறார்கள் கற்கின்றனர். இவர்களுக்கு 2800 ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்கின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவுகளை நாம் தற்போது வழங்கிவரும் நிலையில் எமது கட்டுப்பாட்டின் கீழ் வராத இன்னும் பல முன்பள்ளிகளையும் நாம் இணைத்துக்கொள்ளவுள்ளோம்.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியும் மேற்கொண்டுள்ளோம். இதன் ஒருகட்டமாக டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 600 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி சான்றிதழ்களை இதே அரங்கில் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளோம். என்றார்.

இந் நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் முன்பள்ளி உதவிக்கல்விப் 'பணிப்பாளர் முன்பள்ளி ஆலோசகர் செல்வி தம்பையா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் பாண்ட் வாத்திய வரவேற்புடன் ஆரம்பமான நிகழ்வின் போது முன்பள்ளி சிறார்களின் கைவண்ணங்களின கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றதோடு சிறார்களுக்கு ஆளுநர் இனிப்புப் பொதிகளையும் வழங்கிவைத்தார். (இ)

# கருத்தமர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் வாய்ச்சுகாதார விழிப்புணர்வுக் கருத்தமர்வு நாளை கைதடி நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# பரிசளிப்பு விழா

வல்லை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)


# நெடுந்தீவு பிரதேச சபை

சந்தையும் கடல் உணவும் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும்,
இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2013

**நெடுந்தீவு பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பொதுச் சந்தை, இறைச்சிக்கடை ஆகியன 01.01.2013 ஆம் திகதி தொடக்கம் 31.12.2013 ஆம் திகதி வரை, குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 19.12.2012 நண்பகல் 12 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 21.12.2012 முற்பகல் 10 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 21.12.2012 பிற்பகல் 10.30 மணி வரை

| இல. | குத்தகையின் வகை | சபைக்கு செலுத்தவேண்டிய மாதவாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற்வரி தவிர்ந்த) | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம். |
|---|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 70.000.00 | 3000.00 | 500.00 |
| 02 | பொதுச்சந்தையும் கடல் உணவும் உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியும். | - | 90.000.00 | 3000.00 | 500.00 |

01. கேள்விப்பத்திரம் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது. அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டு பிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

03. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

04. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சந்தையும் கடல் உணவும் உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியினது கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக்கடைக்குரிய கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 28.12.2012ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நெடுந்தீவு பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச சபை
நெடுந்தீவு
07.12.2012

**தானியேல் றெக்சியன்**
தவிசாளர்
நெடுந்தீவு பிரதேச சபை.

(C/1767)


# சேவைகள் பெற்றுக்கொள்ள ஆவணங்கள் அவசியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு சேவைகளை பெறவரும் பொதுமக்கள் குடும்ப அட்டையும் தேசிய அடையாள அட்டையும் தவறாது கொண்டு வரவேண்டும். என பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பிரதேச செயலகத்திற்கு காணிப்பதிவு, நிவாரணம், சான்றிதழ்கள் போன்ற எந்த சேவைகளைப் பெற வரும் போதும் மக்கள் குறித்த் ஆவணங்களுடன் வருகை தர வேண்டும் எனவும் இதன்மூலம் நிரந்தர வதிவிடத்தை அறிவித்து அதற்கான தேவைகளை பெற்றுகொடுக்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# பற்றைகளால் நுளம்பு பெருக்கம்; தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்தில் பரவலாக நுளம்பு, இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக நயினாதீவுப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் பகல் வேளைகளில் இலையான்களும் இரவு வேளைகளில் நுளம்புகளின் பெருக்கமும் அதிகளவில் காணப்படுவதால் மக்கள் தமது வேலைகளை செய்யமுடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவுப் பிரதேசத்தில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவினால் அப்பகுதி பொதுமக்களுக்கு டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையே இதற்கான காரணம் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வீதிகளுக்கு அருகில் கிடக்கும் புற்கள் வெட்டப்படும் நிலையில், வளவுகளுக்குள் பற்றைகளாக வளர்ந்திருக்கும் புற்கள் வெட்டப்படாமல் இருப்பதால் இவற்றிலிருந்தே நுளம்புகளும் இலையான்களும் பெருகுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பாக பொதுச சுகாதார பரிசோதகர் பிரிவினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (175)

# கிளிநொச்சியில் வீடமைப்பு உதவி; கடன் வழங்க அதிக நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி அலுவலகத்தில் இவ்வாண்டு வீடமைப்புக் கடனாக 796 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் இவ்வாண்டு சாதாரண பொதுமக்களிற்குமான ஜனசெவன வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலர்பிரிவில் 149 பயனாளிற்கு 165 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 45 பயனாளிற்கு 63 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 33 பயனாளிகளுககு 479 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 39 பயனாளிகளுக்கு 483 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் வீடமைப்பு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறே அரச உத்தியோகத்தர்களிற்கான ஜனசெவன உபகார வீடமைப்பு கடன்திட்டத்தின் கீழ், கரைச்சியில் 63 பயனாளிகளுக்கும், கண்டாவளையில் 17 பயனாளிகளுக்கும் பூநகரியில் 04 பயனாளிக்கும் பச்சிலைப் பள்ளியில் 5 பயனாளிகளுக்கும் என மொத்தமாக 176 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சுடன் இணைந்த புனர்வாழ்வு வீடமைப்பு கடன்திட்டத்தின் கீழ் கரைச்சியில் 81 பயனாளிகளுக்கும் கண்டாவளையில் 06 பயனாளிகளிற்கும் பூநகரியில் ஒருவருக்கும் பளையில் 4 பயனாளிகளுக்கும் என 193 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், ஜனசெவன மானியத்திட்டத்தின் கீழ் கண்டாவளையில் பயனாளி ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2011 ஆம் ஆண்டு சாதாரண பொதுமக்களுக்கான ஜனசெவன வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தில் 120 பயனாளிகளிற்கு 222 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் அரச உத்தியோகத்தர்களுக்கான ஜனசெவன உபகார வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் 54 பயனாளிகளுக்கு 216 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் வீடமைப்பு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இதனுடன் 2010 ஆம் ஆண்டு சாதாரண பொதுமக்களிற்கான ஜனசெவன வீடமைப்பு கடன் திட்டத்தில் 53 பயனாளிகளுக்கு 477 இலட்சத்து 50 ஆயிரமும் ஜனசெவன மானிய திட்டத்தின் கீழ் கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 30 பயனாளிகளிற்கு 30 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இதேவேளை அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட விசேட ஜனசெவன வீடமைப்பு திட்டத்தின் கீழ் 49 குடும்பங்களுக்கு தலா 20 பேர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 350 இலட்சம் ரூபா வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (69)

# மாற்றுவலுவுடையோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சின் நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல விழிப்புணரவு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களே மாவட்ட மட்டத்தில் ஒருமுறையும் பிரதேச செயலர் மட்டத்தில் 8 முறையும் நடத்தப்பட்டன. அமைச்சின் அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகம் இதற்காக மாவட்டச் செயலகத்திற்கு 75 000 ரூபாவை வழங்கியிருந்தது.

இதன் மூலமாகவே கிராம மட்டத் தொண்டர்களுக்கும், கிராம மட்ட சமூக அடிப்படை நிறுவனங்களான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், முதியோர் சங்கங்கள் என்பவற்றுக்கு விழிப்புணர்வு கருத்துக்கள் வழங்கப்பட்டன.

கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி பிரதேச செயலர்கள் இதற்கான ஒத்துழைப்பை சிறப்பாக வழங்கினார்கள். அடுத்த வருடம் மாற்று வலுவுள்ளோர் தொடர்பாக பண்பாட்டு விளையாட்டு நிகழ்வு களை உள்ளடக்கியதாக வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான கருத்திட்டங்கள் கொழும்பிலுள்ள அமைச்சின் கூட்டத்தில் வைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் புதிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் முதியோர் பேரவை அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் அடுத்த வருடம் ஜனவரி மாத முற்பகுதியில் உருவாக்கப்படவுள்ளது.

முதியோர்சங்க உறுப்பினர்கள் அண்மையில் அரசாங்க அதபருடன் நடத்திய கலந்துரையாடலின் பேரில் இவ் அமைப்பு உருவாக்கப்பட உள்ளது. மாவட்ட சமூக சேவைகள் அலுவல்கம் இவ் அமைப்பு உருவாக்கத்திற்கான பங்களிப்பை அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் வழங்குகின்றது. மாவட்டத்தில் உள்ள முதியோர்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு பிரதேச செயலர்களின் ஒத்துழைபபைப் பெற்று இவ் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

பிரதேச ரீதியாக இயங்கும் முதியோர் சங்கங்கள், சமாசம் போன்ற ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட உள்ளன.

சென்ற வருடம் மாவட்ட மகளிர் அபிவிருத்திப் பேரவை எனும் அமைப்பு அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம் ஆகியவற்றின் உதவியுடன் உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ் அமைப்பு ஒரு அரசசார்பற்ற அமைப்பாக இயங்கி UNDP நிறுவன நிதியையும் பெற்று பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் பலவற்றிற்கு சுயதொழில் உதவிகளை வெற்றிகரமாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அதேபோல தற்போது மாவட்ட முதியோர் பேரவை எனும் அமைப்பை உருவாக்க முயற்சி எடுத்துள்ள அரசாங்க அதிபரை முதியோர் சங்க உறுப்பினர்கள் பாராட்டியுள்ளனர். (90)

# அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றவர்களின் விபரங்களை மாவட்டச் செயலக பண்பாட்டு கிளையால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரங்கள் வருமாறு:

கட்டுரை

திருமதி இ.மீனலோஜினி (அதிபர் - உருத்திரபும், ம.வி), திருமதி சு.நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), செல்வி.யோ. அனுசியா (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச சபை கரைச்சி).

கவிதை

திருமதி சு.நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), க.லிங்கராசா (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), செல்வி. யோ.அனுசியா (முகாமைத்தவ உதவியாளர் பிரதேச சபை கரைச்சி).

சிறுகதை

திருமதி அருணாசலம் இரஞ்சிதமலர் (ஆசிரியர் உருத்திரபுரம் ம.வி), பா.ஜெயதாசன் (பண்பாட்டு அதிகாரி பிரதேச செயலகம் - பளை), திருமதி உமாநிதி கணேசானந்தன் (சுகாதார வைத்திய அதிகாரி - பணிமனை கிளிநொச்சி)

கையெழுத்துச் சஞ்சிகை

"கிளிஅமுதம்'' திருமதி சு.நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), சுவடுகள் - ம.றீற்றாஜென்சி (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் - பளை), பா.ஜெயதாசன் (பண்பாட்டு அதிகாரி பிரதேச செயலகம் - பளை).

ஓவியம்

ஆ. தீபன் திலீபன் (ஆசிரியர் பூநகரி ம.வி), மு.கஜோதரன் (புனர்வாழ்வு உதவியாளர் - மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), த.பேரின்ப சிவம் (வீதி அபிவிருத்தி அதிகார சபை - கிளிநொச்சி) (தொடரும்)

# பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த வியாழன் காலை 10 மணிக்கு இலவச பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டது.

கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் தலைமையில் சமய வழிபாட்டுடனும், தேசிய கீதத்துடனும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

தரம் ஒன்றிலிருந்து பதினொன்று வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சகல ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

மிகுந்த பணச் செலவுடன் அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் ஓர் கல்விச் சொத்தாகும். கல்வி மேம்பாட்டிற்காக வழங்கப்படும் பாடநூல்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும்.

அத்துடன் அடுத்த வருட மாணவர்களுக்கு பயன்படும் வகையில் பாடநூல்களை கவனமாக பாவிக்க வேண்டுமென அதிபர், மாணவர்களை கேட்டுக் கொண்டார். (105)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் – 2012

உறுப்புரை - 9

ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.





வடமாகாண கலை இலக்கிய விழா நேற்று முன்தினமும் நேற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆய்வரங்க நிகழ்வின் ஒரு பகுதியைக் காணலாம். (116)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்!

ஐக்கிய நாடுகள் சபைக்கான ஜப்பான் உள்ளிட்ட சில நாடுகளில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிகள் யாழ் வந்து திரும்பியிருக்கிறார்கள்.

வழமையாக இவ்வாறு யாழ்ப்பாணம் வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைப் போன்று சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான குழு என்ற பெயரிலான அமைப்பின் பிரதிநிதிகளை மட்டும் சந்திக்காமல், மற்றுமொரு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவையும் இவர்கள் சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றுள்ளனர்.

காலையில் ஐ.நா. பிரதிநிதிகளைச் சந்தித்த சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான குழு என்ற பெயரிலான அமைப்பு, வழமை போன்றே இம்முறையும் நீண்ட குற்றப்பிரேரணையொன்றை ஐ.நா. பிரதிநிதிகளிடம் சமர்ப்பித்துள்ளது. .

போர் நிறைவடைந்த பின்னர் இங்கே அமைதி ஏற்படுத்தப்படவில்லை, சமாதானம் மலரவில்லை, மீள்குடியேற்றம் ஒழுங்காக நடைபெறவில்லை, அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று நீண்ட பட்டியலுடன், பேச்சுச் சுதந்திரம் இல்லை, போக்குவரத்துச் சுதந்திரம் இல்லை என்றெல்லாம் வேறு ஐ.நா. பிரதிநிதிகளிடம் இந்தக் குழுவினர் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

இதேபோன்றுதான், இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி யாழ் வந்தபோதும் ஒரு நீண்ட குற்றப் பத்திரிகையை இவர்கள் அவருக்கு வாசித்தளித்தனர்.

இலங்கையின் சமாதான முயற்சிகளோடு சுமார் 10 வருட அனுபவத்தையும், வடக்குக்கு அடிக்கடி வந்துபோன நேரடி அனுபவத்தையும் கொண்ட அகாசியோ, போன தடவை தான் வந்தபோது இருந்ததைவிட வடக்கு அபிவிருத்தியில் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருப்பதை நேரடியாகக் காணக்கூடியதாக இருப்பதாக இவர்களிடம் கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி, எப்போதுமே இருண்ட காலங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்காமல், நடைபெற்று வருகின்ற முன்னேற்றங்களையும் கண்டுகொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள் என்று, ஜப்பான் தேசத்தின் அந்தப் பிரதிநிதி நம்மவர்களுக்கு ஆரோக்கியமான சிந்தனைக்கு வழிகாட்டிச் சென்றிருந்தார்.

ஆனாலும் விடமாட்டோம் என்று, இம்முறை வந்த ஐ.நா.வுக்கான ஜப்பான் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினரிடமும் அகாசியிடம் வாசித்த அதே குற்றப்பத்திரிகையையே மீண்டும் இந்த சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான குழு என்ற பெயரிலான அமைப்பினர் வாசித்துள்ளனர்.

ஆறறிவு படைத்த மனிதர்கள் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது பொதுவான ஒரு எதிர்பார்ப்பு. அப்படி இல்லாவிட்டாலும், அனுபவசாலிகளின் புத்திமதியையாவது செவிமடுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர்ச்சூழலுக்குள் அல்லல்பட்டு முள்ளிவாய்க்கால் வரையில் தமிழ்ச் சமூகம் அலைக்கழிக்கப்பட்ட அனுபவங்களிருந்தும் நாம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

ஹிரோஷிமா, நாகசாகி என்ற இரு பெரும் நகரங்களின் மீது அணுகுண்டு வீசப்பட்ட கொடூர அனுபவங்களிலிருந்து பீனிக்ஸ் பறவை போன்று மீண்டெழுந்து, குண்டு வீசியவர்களுடன் நல்லிணக்கமாகச் செயற்பட்டு அவர்களைக் கொண்டே தமது நாட்டை உலகின் முதன்மையான பொருளாதார வல்லரசாக மாற்றிக் காட்டிய அனுபவம் கொண்ட ஜப்பான் தேசத்து விசேட தூதுவர் அகாசியின் புத்திமதியைக் கேட்கவும் நாம் தயாரில்லை.

இவர்கள் உண்மையாக தம் நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும்:

2009 போர் நிறைவடைந்த பின்னர் ஒரு முன்னேற்றமுமா நமது பிரதேசத்தில் ஏற்படவில்லை?

ஐ.நா. சபையே பாராட்டியிருக்கின்ற மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோரின் துரித மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகள், போக்குவரத்து விரிவாக்கம், படைக்குறைப்பு என்று எதுவுமே இங்கு நடைபெறவில்லை என்றா சொல்கிறீர்கள்?

சிலரைச் சில காலத்துக்கு ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்றலாம்.

ஆனால், எல்லோரையும், எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது என்பதை நம்மவர்களில் சிலர் புரிந்துகொண்டால் சரிதான்.

- ஆசிரியர்

# மாத்தளை எலும்புக்கூடுகள் யாருக்குச் சொந்தம்?

# மேலும் வலுவடைகிறது சர்ச்சை

(கொழும்பு)

மாத்தளையில் மீட்கப்பட்டிருக்கும் மனித எலும்புக்கூட்டுகளுக்கு சொந்தக்காரர்கள் யார் என்பது குறித்து பெரும் சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

இந்த எலும்புக்கூடுகள் ஜே.வி.பி. கிளர்ச்சிக்காரருடையவை என்ற சந்தேகம் தற்போது வலுவடைந்து வருகிறது.

மாத்தளை வைத்தியசாலையில் அண்மையில் மீட்டெடுக்கப்பட்ட பாரிய எலும்புக் கூட்டுத் தொகுதிகள் தொடர்பிலான விசாரணைகளை திசை திருப்ப முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மண்டையோடுகள் மற்றும் எலும்புக் கூடுகள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டவை என வெளியான தகவல்களில் உண்மையில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

1989ஆம் ஆண்டு ஜே.வி.பி கலவரத்தின் போது கொல்லப்பட்ட இளைஞர்களின் எலும்புக்கூடுகளாகவே இவை இருக்க வேண்டுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த எலும்புக் கூடுகள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்டவை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என மாத்தளை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் அஜித் ஜயசேன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி கலவரம் இடம்பெற்ற காலத்தில் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சித்திரவதைக் கூடங்கள் காணப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளை திசை திருப்பும் நோக்கில் தொற்று நோயின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்கள் இவ்வாறு புதைக்கப்பட்டுள்ளதாக கருத்து வெளியிடப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை விடவும் அதிகளாவன எலும்புக்கூடுகள் காணப்பட்டிருக்கலாம் என டாக்டர் ஜயசேன தெரிவித்துள்ளார். அநேகமான ஆதாரங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு தொகுதியில் மட்டுமே விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பெரும்பகுதி ஆதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சம்பூர் அனல்மின் நிலையம் தடைகளைத்தாண்டி அறுவடை தருமா?

## தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளம்

(கொழும்பு)

சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் அனல் மின்நிலைய கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவது ஏற்கனவே ஒரு ஆண்டு தாமதமாகியுள்ள நிலையில், சில முக்கிய மதிப்பீடுகளை மீளாய்வு செய்யுமாறு மின்சாரசபை இந்தியாவின் தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்தைக் கோரியுள்ளது.

இதனால், புதுடில்லியில் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்கும், இந்தியாவின் தேசிய அனல்மின் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கும் இடையில் அண்மையில் நடந்த பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவின மதிப்பீட்டைக் குறைக்குமாறு இந்திய தேசிய அனல்மின் கூட்டுத்தாபனத்திடம் இலங்கை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் செலவினத்தை மின்சாரசபையே பொறுப்பேற்க வேண்டியுள்ளதால், குறைந்தளவு நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய, பொறியியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சாத்திய அறிக்கையில் இந்திய நிறுவனம் குறிப்பிட்ட வட்டி வீதம் குறித்து இலங்கை மின்சாரசபை கவலை கொண்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். இலங்கை மின்சாரசபையும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனமும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இல்லாவிட்டால், அது மின்சார சபைக்கு பாரிய இழப்பாக அமையும். அது இந்திய அரசாங்கத்துக்கு கெட்டபெயரையும் ஏற்படுத்தும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இந்திய அதிகாரி ஒருவர், இதுதொடர்பான பேச்சுக்கள் மெதுவாகவே முன்னெடுக்கப்படுவது குறித்து ஏமாற்றம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்திய நிறுவனத்துடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இலங்கை மின்சாரசபை மீது அரசியல் ரீதியிலான அல்லது இராஜதந்திர ரீதியான அழுத்தங்கள் ஏதும் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது முற்றிலும் தொழில்நுட்பரீதியான விவகாரம் என்றும், இரு தரப்பு பொறியியலாளர்களும் நிபுணர்களுமே இதில் தொடர்புபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடமையில் கவனயீனம்; நால்வரின் பதவி பறிபோனது

(கொழும்பு)

தெஹிவளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மூவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அவர்களது கடமையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களது உத்தியோகபூர்வக் கடமைகளை அலட்சியப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கடமையிலிருந்து தற்காலிமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

உயர் மட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரினுடைய உறவினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவர்கள் நடந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடன் அட்டை மோசடி தொடர்பான விசாரணையில் உயர் மட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரினுடைய உறவினரின் பெயரை தவறுதலாக இவர்கள் சம்பந்தப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவர்கள் உரிய முறையில் முறைப்பாடுகளை பதிவு செய்யவில்லை எனவும் வாக்குமூலங்களைத் தவறான முறையில் பதிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# தீ விபத்தின் மர்மம் என்ன? துருவித்துருவி விசாரணை

(கொழும்பு)

கொழும்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற தீ விபத்தின் பின்னணி எதுவாக இருக்கும் என்பதைக்கண்டறிவதற்கு பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு - டாம் வீதியில் அமைந்துள்ள கொழும்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற தீ விபத்துத் தொடர்பில், துரித விசாரணைகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலர் கமல் பத்மசிறி, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கட்டடத் தொகுதியில் மேற்கொண்ட இரசாயனப் பரிசோதனைகளில் தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை.

இவ்விபத்துச் சம்பவத்திற்கு மின்சார ஒழுக்கு காரணமாக இருக்குமா எனக் கண்டறிவதற்கு இலங்கை மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாதம் 26 ஆம் திகதி இரவு இப் பிரதேச செயலகத்தில் தீ விபத்து ஏற்பட்டு அதில் பல ஆவணங்கள் அழிந்து போனமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட வழிமுறைகள் ஊடாக ஊடகங்களுடன் போராடும் இராணுவம்!

உதயன் வலம்புரி



"இராணுவத்தின் மீது சுமத்தப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், பரப்பப்படும் வதந்திகள் மற்றும் ஆயுதப் படைகளுடன் அடிக்கடி தொடர்புடைய வேறு விடயங்கள் போன்ற சட்டரீதியான கவலைகளுக்கு தீர்வுகாண நீதித்துறையை அணுகி திருத்திக் கொள்வதுதான் சிறந்த வழி. இராணுவ அறிக்கை தெரிவித்திருப்பது, "யாழ்ப்பாணத்தில் ஒரு தற்கொலை சம்பவம் இடம்பெற்றால்கூட இந்த இரண்டு பத்திரிகைகளும் அந்தப் பகுதியில் ஒரு இராணுவ முகாம் இருப்பதாக அறிவிப்பதை சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. இதன்படி தேவையற்ற முறையில் இராணுவத்தின்மீது அவதூறு பரப்புகிறது.""

## என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

**யாழ்ப்பாணத்திலிருந்து** பிரசுரமாகும் இரண்டு தமிழ் செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக அவதூறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையூடாக இராணுவம் சொல்ல நினைப்பது - மற்றும் சரியாகச் சொல்வதானால்: "இராணுவம் சட்டத்துக்கு மேலானது அல்ல, அதேபோல நாங்கள் சட்டத்துக்கு கீழானவர்களும் அல்ல, மற்றும் இராணுவத்தினதும் மற்றும் எங்கள் வெற்றி வீரர்கள் ஆகியோரின் நல்ல பெயரைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் உக்கிரமாகப் போராடுவோம்" என்கிற செய்தியையே.

நீதிமன்ற வழக்கு, ஒவ்வொரு பத்திரிகையிடமும் 100 மில்லியன் இலங்கை ரூபாய்களை நட்டஈடாகக் கோருகிறது. அவை இராணுவத்தின் தலைமைத் தளபதி லெப்.ஜெனரல். ஜகத் ஜயசூரியாவின் பெயரினால் தொடரப்பட்டுள்ளன.

இராணுவத்தின் அறிக்கைகளின்படி இதேபோன்ற இன்னும் பல வழக்குகள் வரக்கூடும் என்று நம்பப்படுகிறது. இராணுவ தலைமையகத்தின் பணிப்பாளர்(சட்ட) அலுவலகம் மற்றும் ஜெனரல். ஜகத் ஜயசூரியா ஆகியோர் கைநிறைய விடயங்களை வைத்துள்ளார்கள், மற்றும் எதற்கும் தயாராக அவர்களின் பேனாவில் எப்போதும் மை நிறைத்து வைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் மீது சுமத்தப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், பரப்பப்படும் வதந்திகள் மற்றும் ஆயுதப் படைகளுடன் அடிக்கடி தொடர்புடைய வேறு விடயங்கள் போன்ற சட்டரீதியான கவலைகளுக்கு தீர்வுகாண நீதித்துறையை அணுகி திருத்திக் கொள்வதுதான் சிறந்த வழி. இராணுவ அறிக்கை தெரிவித்திருப்பது, "யாழ்ப்பாணத்தில் ஒரு தற்கொலை சம்பவம் இடம்பெற்றால்கூட இந்த இரண்டு பத்திரிகைகளும் அந்தப் பகுதியில் ஒரு இராணுவ முகாம் இருப்பதாக அறிவிப்பதை சுட்டிக்காட்டத் தவறுவதில்லை, இதன்படி தேவையற்ற முறையில் இராணுவத்தின்மீது அவதூறு பரப்புகிறது."

இவைகள் நீதிமன்றங்களினால் தீர்ப்பளிக்க, அல்லது சிவில் சமூகங்கள் கிளர்ச்சி செய்ய வேண்டிய விடயங்களாகும். ஆனால் சில நோக்கங்களை கொண்ட ஊடகப் பிரிவினர், ஒரு பயணத்தை நடுவழியில் நிறுத்துவதுபோல, ஏதாவது ஒன்றை அல்லது இரண்டையுமே மாற்றீடு செய்ய வழி தேடுகிறார்கள். அல்லது அதுதான் இராணுவத்தினருடைய தற்போதைய குற்றச்சாட்டாக உள்ளது. ஊடகங்கள், சிவில் சமூகங்கள் மற்றும் ஆட்சிஅமைப்பு என்பனவற்றிற்கு பதிலாக தங்களை மாற்றீடு செய்ய முயற்சிக்கின்றன. இந்த ஊடக விசாரணை என்பது உண்மைகளை திரித்துக் கூறுதல் என்பதைவிட மோசமானவை.

அது சாதாரணமாக யுத்த களத்துக்கு வெளியே உள்ளவர்களை, சட்டத்தைப் பயன்படுத்தி எதிர்ப்பாளர்களை அதட்டிக் கீழடக்க முயலுவதைப் போன்றது என்கிற பழியை இராணுவம் மற்றும் அரசாங்கம் மீது சுமத்துவதை ஒத்தது. ஊடகத்துறையின் நண்பர்கள் மற்றும் ஜனநாயகத்துக்காக குரல் எழுப்புபவர்கள் போன்றவர்கள் அதிக செலவு மிக்க நீதிமன்ற வழக்குகள் விமர்சனங்களை நிரந்தரமாகவே மௌனமாக்கிவிடும் என்று வாதிப்பது வழக்கத்துக்கு மாறான ஒன்றல்ல. இதுபோன்ற நீதித்துறையின் தீர்ப்புகள் ஊடக நிறுவனங்களின் வியாபாரத்தை பாதிப்பதுடன் அவற்றுக்கு நட்டமேற்படுத்தி நிரந்தரமாக முடக்கிவிடுவதற்கும் சாத்தியம் உள்ளது. அல்லது அதுதான் விவாதமாகவும் இருக்கும். இலங்கைக்கு இது ஒன்றும் அதிசயமான சம்பவமல்ல. நிச்சயமாக இனப்போர் மற்றும் வன்முறைகளுக்குப் பின்னர் ஆயுதப்படைகள் மீள்கட்டமைப்பு மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றில் ஈடுபட்டு வந்துள்ளதால், இது ஒன்றும் விசித்திரமான சம்பவம் அல்ல. சந்தேகக் கண்கொண்டு நோக்கி வந்த சர்வதேச சமூகம் போரினால் சீரழிந்த வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஆயுதப் படைகள் ஆற்றிவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பை குறைந்தது ஓரளவுக்காவது ஏற்றுக்கொண்டுள்ளது.

மற்றைய விவாதங்களையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு நோக்கினால், ஆயுதப்படைகள் திட்டமிடலாளர்கள், நிறைவேற்றுபவர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆக பங்களிப்பு செய்திருக்காவிட்டால் இந்த மீள்கட்டுமானப் பணிகள் இத்தனை விரைவாக நிறைவேறியிருக்குமா என்கிற அரசாங்கத்தின் கேள்வியிலும் நியாயம் இல்லாமல் இல்லை. மீள்கட்டுமானப் பணிகளுடன் ஒத்து நோக்கும்போது மீள்குடியேற்றம் நிறைவடையாமல் அல்லது திருப்தி தராமல் இருக்குமாயின், அதற்கு ஆயுதப்படையினரை குறை சொல்ல முடியாது. அது அரசாங்கத்தின் நிருவாக முடிவு, அதற்கு இராணுவம் சில உள்ளீடுகளை வழங்கியிருக்கலாம்.

இராணுவ முகாம்களுக்கு அருகில் அமைந்துள்ள குடிமக்கள் வாழ்விடங்களைச் சுற்றியுள்ள ஆயுதப்படையினரின் பிரசன்னம் ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகிறது. ஆனால் மோசமாக இல்லாவிட்டாலும் அளவுக்கு மீறிய ஆயுதப்படையினரின் பிரசன்னம் ஒரு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தலாம். நல்ல நேரங்களில்கூட அளவுக்கதிகமான ஈடுபாடு ஒரு நட்பை வெறுக்கும் தன்மையான ஒரு உறவை உருவாக்குமே தவிர, நல்லதையல்ல. திரும்பவும் இது ஒரு உலகளாவிய நிகழ்வாகவே இருக்கிறது, மற்றும் இரு தரப்பினரும் இதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

தருஸ்மன் அறிக்கையிலிருந்து பாடம் பெற்றுக்கொண்டிருந்தும்கூட ஐ.நா. நிருவாகம் பெற்றியின் அறிக்கையில் அப்படியான நிகழ்வு திரும்பவும் இடம்பெறாமல் உறுதி செய்வதற்கு அக்கறை காட்டாததைப்பற்றி வருத்தத்துடன் குறிப்பிடவேண்டி உள்ளது. பெற்றியின் அறிக்கை வெளியிடப்படும் முன்னர் அதன் சில பாகங்கள் கறுப்பு மையினால் மறைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முன்னர் வெளியே கசிந்த அறிக்கையில் அந்தப் பகுதிகள் தெளிவாக வெளியாகியிருந்தன. அப்படியானால் எது உத்தியோகபூர்வ அறிக்கை? செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு முதலே உள்ளேயிருந்து யாராவது முன்கூட்டியே தீர்ப்பு வழங்கியுள்ளார்களா? அல்லது அவர்கள், செயலாளர் நாயகம், அறிக்கையை பார்ப்பதற்கு முன்னரே அவருக்கு மேலதிக அழுத்தங்களை வழங்க விரும்பினார்களா? யார் அவர்கள்? ஏன் அவர்கள் தொடர்ந்தும் அணுகுகிறார்கள்?

ஐ.நா. நடவடிக்கைகளில் இந்த வகையான கசிவுகள் எப்போதும் ஏற்பட்டதில்லை.இந்த தொடர்ச்சியான கசிவின் தன்மையானது, காரண காரியங்களின் சுயாதீனத் தன்மையை அடையாளம் காட்டுகிறது. நிச்சயமாக ஐ.நா.நிருவாக அமைப்பின் ஒருபகுதியினர் இலங்கையை தொந்தரவு செய்வதையும் மற்றும் அவமானப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். அல்லது குறிப்பிட்ட ஒரு உபாயம் ஐ.நா.வின் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளதா? பான் கீ மூனின் அரசாட்சியில் உண்மையில் ஏதோ மோசமான சில இடம்பெறுகின்றன. ஐ.நா. அறிக்கைகளின்படி அல்லது சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளிக் கொணர்ந்ததின்படி, ஈழப்போர் - 4இல், எல்.ரி.ரி.ஈயின் பாத்திரம் மற்றும் அதன் பங்களிப்பு என்பனவற்றைப்பற்றி சிறிதளவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் உட்பட குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினர், அல்லது அவர்களது புரவலர் தேசங்கள், மற்றும் தங்கள் அருகிலிருக்கும் தொகுதிமீது அழுத்தங்களை நீண்டகாலமாகச் செலுத்திய அவற்றின் அரசியல்வாதிகள் பற்றி எதுவும் வெளியிடாமல் அமைதி காக்கப்பட்டுள்ளது.

நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. அது வழங்கப்பட்டதாக நன்றாகத் தெரியவும் வேண்டும். ஐ.நா. உட்பட, அரசாங்கத்தையும் மற்றும் ஆயுதப் படைகளையும் அதேபோல சர்வதேச சமூகத்தையும் பொறுத்தமட்டில் இதுபெரிதும் உண்மையாகும். இதன்படி இருபக்கத்திலிருந்தும் - மற்றும் இனப் பிரச்சினையின் எல்லா பங்காளர்களிடமிருந்தும் - அவர்கள் பொதுவாக வெளிப் பக்கத்தை மட்டுமே பார்ப்பதால் பிரச்சினையின் உட்பக்கத்தை நன்றாக அவதானித்து அவர்களின் ஆதரவையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அமைதிப் படைகளை சவேந்திரா வழிநடத்துவார்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினரைக் கண்காணிக்கும் பொறுப்பு, ஐ.நாவிற்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

லெபனானில் முன்னெடுக்கப்பட்டு வரும் அமைதி காக்கும் பணிகளை பார்வையிடும் பொறுப்பு சவேந்திர சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலி ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தற்போது லெபனானில் கண்காணிப்பு பணிகளை மேற் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# "கமரா" சுமக்கும் மோப்ப நாய்கள்

(கொழும்பு)

குற்றவியல் விசாரணைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற பொலிஸ் மோப்ப நாய்களுடன், கமராக்களை பொருதத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மோப்ப நாய்களின் கழுத்து பகுதியில் நவீன தொழில்நுட்பத்திலான கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போதும் அதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வலுவடைகிறது வர்த்தக உறவு பாகிஸ்தானுடன் கொழும்பு கூட்டு

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவு தொடர்பில் தாம் பெருமை கொள்வதாகவும், இந்த உறவின் வெளிப்பாடாக இரு தரப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ள விரும்புவதாகவும் பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர் ஆணையாளரான ஓய்வு பெற்ற விமானப் படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி கடந்த வெள்ளியன்று தெரிவித்துள்ளார்.

தென்னாசிய நாடுகளில் இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி நாடாக பாகிஸ்தான் காணப்படுவதுடன், சுதந்திர வர்த்தக உடன்பாட்டை மேற்கொள்ளும் முதலாவது நாடாகவும் இது காணப்படுவதாக இஸ்லாமபாத்தின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறையின் பெண்கள் சம்மேளனத்தின் நிறுவுனரான ச்மீனா பசாலின் தலைமையிலான பிரதிநிதிகளுடன் உரையாடும் போதே ஜெயலத் வீரக்கொடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் 200 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான கலந்துரையாடலில் ஈடுபடுவதாகவும் உயர் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளும் ஆழமான அரசியல் உறவைப் பேணிவருவதாகவும், தற்போது ஆசியப் பிராந்தியத்திற்கு நலன் பயக்கக் கூடிய இரு தரப்பு வர்த்தக உறவை மேம்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளதாகவும் ஜெயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

தற்போதைய பாகிஸ்தானுடனான இலங்கை வர்த்தகமானது 400 மில்லியன் டொலராகக் காணப்படுவதாகவும், இன்னும் இரு ஆண்டுகளில் இத்தொகை ஒரு பில்லியன் டொலராக அதிகரிக்கப்படும் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தானில் முதலீடு செய்வதில் இலங்கை ஆர்வமாக உள்ளது. உள்நாட்டு பங்குச் சந்தையில் எமது நாட்டின் தேயிலையின் பங்கு விலையானது முன்னரை விட இரண்டு சதவீதமாக அதிகரித்துள்ளது. பாகிஸ்தானின் உற்பத்திப் பொருட்கள் இலங்கைச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெறுவதுடன், இவற்றின் உச்ச தரம் காரணமாக பாகிஸ்தான் உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கையில் கேள்வி அதிகரித்துள்ளது எனவும் பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர் ஆணையாளர் ஜெயலத் வீரக்கொடி மேலும் தெரிவித்துள்ளார்.

பிராந்திய உறுதித்தன்மை, அமைதி, பாதுகாப்பு ஒத்துழைப்பு போன்றவற்றில் பாகிஸ்தான், இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதானது பாராட்டுக்குரியது எனவும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, 2013 இல் இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள ஏற்றுமதி கண்காட்சி நிகழ்வில் இலங்கை உயர் ஆணையாளர் மற்றும் தொழில் அதிபர்கள் கலந்துகொள்ள வேண்டும் என இஸ்லாமபாத்தின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறையின் பெண்கள் சம்மேளனம், ஜெயலத் வீரக்கொடியிடம் கோரியுள்ளது.

இதனுடன் தொடர்புபட்ட அமைச்சர்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களிடம் இதனைத் தெரியப்படுத்தி இவ் ஏற்றுமதிக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கான இவர்களின் அதிகபட்ச பங்களிப்பை உறுதிப்படுத்துவதாகவும் வீரக்கொடி தெரிவித்தார்.

# ஷிராணிக்கு எதிரான புதுவியூகம்; இலஞ்ச ஊழல் விசாரணை ஆரம்பம்



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான பனியுத்தத்தில் மற்றுமொரு நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. இதன் ஒரு கட்டமாக அவரது சொத்துக்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் சொத்துக்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு விசாரணைகளை நடாத்தவுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு மேலதிகமாக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவும் தமது விசாரணைகளை நடாத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொத்து விபரங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் சரியானவையா என முதலில் ஆராயப்படவுள்ளது.

வருமானத்திற்கு மேலதிகமாக சொத்துக்கள் காணப்படுகின்றனவா என்பது பற்றிய விசாரணைகள் நடத்தப்படும் என இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# "லயன் எயார்" விமானிகளின் சடலங்களை? பூநகரியில் தேடி வேட்டை

(கொழும்பு)

லயன் எயார் விமானத்தில் பயணம் செய்த விமானிகளின் சடல எச்சங்களைக் கண்டுபிடிக்க பூநகரி கடற்கரையில் தேடுதல்கள் நடத்தப்படவுள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 229 ஆம் நாள் பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்களுடன் புறப்பட்ட லயன் எயார் விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது.

இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தை அடையாளம் காட்டியுள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளியான சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், விமானத்தில் பயணம் செயதவர்களின் உடல்கள் விடுதலைப் புலிகளால் பூநகரி கடற்கரையோரத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்து, பூநகரி கரையோரத்தில் விமானிகள் மற்றும் பணியாளர்களின் உடல்களை தேடும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதற்கென தடயவியல் நிபுணர்கள், கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ஆனந்த சமரசேகர தலைமையிலான சட்டமருத்துவ அதிகாரிகள், அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் மற்றும் புலனாய்வு அதகாரிகளைக் கொண்ட சிறப்புக் குழு ஏற்கனவே பூநகரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு கூட்டமைப்பு எம்.பி.க்கள் முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் விரைவில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது. அண்மையில் வரவு செலவுத் திட்ட விவாத தேநீர் விருந்துபசாரமொன்றில் ஜனாதிபதியும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நட்பு ரீதியாக பேசிக் கொண்டனர்.

இதன்போது பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து ஜனாதிபதி கூட்டமைப்பினருக்கு அழைபபு விடுத்துள்ளார். இந்த அழைபபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எதிர்வரும் வாரமளவில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் மட்டுமே பேச்சுவார்தை நடத்தப்படவுள்ளது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அருள்பிரகாசத்தின் ஆலோசனை

## சிங்கள மக்களிடம் சமர்ப்பிக்க முஸ்தீபு

(கொழும்பு)

நீண்டகாலம் புரையோடிப் போயுள்ள இனப பிரச்சினைக்கு 30 வருட கால போராட்டங்களை நன்கறிந்த பொதுமகனொருவர் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கத் தயாராகின்றார்.

ஏ.ஆர்.அருள்பிரகாசம் என்ற இந்த பொதுமகன் தனது தீர்வுத்திட்டத்தை முதன்முதலாக சிங்கள மக்கள் முன்வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இனப்பிரச்சினை தீர்வுக்காக முன்வைக்கப்படவுள்ள திட்டம் தொடர்பாக அவர் விளக்கமளித்தார்.

எனது தீர்வுத்திட்டத்தை முதன் முதலாக சிங்கள மக்களின் முன்பாக வைக்கவுள்ளேன். இதறகு ஏதுவாக ஏற்கனவே சிங்கள, தமிழ் நல்லுறவு இயக்க மொன்று ஆரமபிக்கப்பட்டுள்ளது.

தீர்வுத்திட்டம் இப்போது சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்படுகின்றது. எனது தீர்வுத் திட்டத்தை நான் ஏற்கனவே அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் முன்வைத்துள்ளேன்.

இத் தீர்வுத்திட்டத்திற்கு பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் தாம் விரும்பும் திருத்தங்களை முன் வைக்கலாம் என அவர் தெரிவித்தார்.



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, அவரது கணவர் பிரதீப் காரியவசம் மற்றும் மகன் ஆகியோர் நேற்று முன்தினம் தலதா மாளிகைக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். வழிபாடுகளில் ஈடுபட்டுள்ள பிரதம நீதியரசரின் குடும்பத்தாரை காணலாம்.

# பிள்ளைகளின் செயற்பாடுகளை பெற்றோர் அவதானிக்க வேண்டும்

## யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

பிள்ளைகள் பாடசாலையில் இருக்கும் நேரத்திலும் பார்க்க வீட்டிலேயே அவர்கள் அதிக நேரம் இருப்பதால் அவர்களின் செயற்பாடுகள் குறித்து பெற்றோர்கள் அக்கறைசெலுத்த வேண்டும் என யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி' யில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆண்டுக்கான விடுகை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்ற போது அதில் தலைமையுரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்கள் எட்டு மணித்தியாலம் பாடசாலையில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். ஏனைய பதினாறு மணித்தியாலங்கள் வீட்டில் பெற்றோர்களின் பாதுகாப்பில் உள்ளனர். இந் நேரத்தில் மாணவ, மாணவிகளின் செயற்பாடுகளை கண்காணிப்பது பெற்றோரின் கடமையாகும். தற்போதைய மாணவர்களின் நல்லொழுக்கம் மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. ஆரம்பத்திலேயே இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும். வழிதவறிச் சென்ற பின்னர் கவலைப்படுவதில் பிரயோசனம் இல்லை. எமது பாடசாலையில் ஆசிரியர்கள் சிறந்த முறையில் கல்வியை ஊட்டுகின்றனர். ஆசிரியர்களினால் மட்டும மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கமுடியாது இதில் பெற்றோரின பங்கும் அளப்பரியதாகும் என அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (105)



கடந்தவாரம் மழையினால்பாதிக்கபட்ட ஜே/230 தந்தை செல்வாபுரம் மற்றும் ஜே/222 இளவாலை வடமேற்கு பிரிவைச் சேந்த 257 பொதுமக்களுக்கு வெள்ளநிவாரணம் நேற்று முன்தினம் தெல்லிப்பளைப் பிரதேசசெயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி வலி. வடக்கு வலி. தெற்கு அமைப்பாளர் ஜெயபாலசிங்கம் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கி வைத்தார். பிரதேசசெயலர் சிறி மோகன் மற்றும் கியுமெடீக்கா நிறுவனத்தின் வெளிக்கழக உத்தியோகத்தர் நல்லசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்


# வேலைவாய்ப்பு பணியகத்தினால் வடக்கில் விசேடசெயற்பாடு

(பருத்தித்துறை)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு நாடுபூராகவும் நடத்தவுள்ள செலாவணியை வென்ற கடல் கடந்த வீரர்(சுட்டவிருவோ) 10 நாள் பாராட்டு நிகழ்வும், கடல் கடந்த வீரர்மாவட்ட அமைப்பை வடமாகாணத்தில் நிறுவும் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலன் பெரேரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தலைவர் அமல் தெ.லல்காதிகார, அமைச்சின் செயலாளர் கர்ணல் நிசங்க என்வியரட்ண உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாக அமைச்சின் பிரசார மக்கள் தொடர்பு இணைப்பாளர் எம்.டி. ஹெட்டியாராட்சி அறிவித்துள்ளார். (01)

# பரமர் சங்கமம்



'சாணேற முழம் சறுக்கிறே'ண்ட கூற்று பரமரின் வாழ்க்கேல அத்துபடியான ஒருசங்கதி. இப்படிச்சொன்னோடனம் ஆகப் பரமருக்கு மட்டுமா அந்த நிலைமை; நாட்டிலுள்ளவர்களில் தொண்ணூறு வீதமானவர்களுக்கும் அதுதான் விதி எண்டு புறுபுறுக்கிறீர்களா?

சரி விசயத்தைக் கேளுங்க அதுக்குப்பிறகு எதெண்டான்ன முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

டிசம்பர் மாதம் 05ஆம் திகதி இவ்வருடத்துக்கான 'கலாபூஷணம' விருது பெற்றவர்களின் விபரங்கள் பத்திரிகைகளில் போடப்பட்டிருந்தன. இந்த வருடமே முதல் முறையாக விண்ணப்பித்த பலருக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதைப்பாக்க விண்ணப்பித்தவைக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் சொல்லவா வேண்டும்? கலைஞர்கள் வாழும் பொழுதே கௌரவிக்கப்பட வேணுமெண்ட அடிப்படையில் சகலரும் வரவேற்க வேண்டிய காரியம்.

அதுவும் கேட்டு வாங்காமல் கிடைச்சால் இன்னும் அதன் பெறுமானம் அதிகம். அரசு விருது என்னும் போது விண்ணப்பம் கோரி வழங்குவதைக்குறை சொல்லவும் முடியாது.

தொடர்ந்து நான்கு முறைகளில் 2005, 2007, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் பரமரும் கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பித்து உதாசீனப்படுத்தப் பட்டுள்ளதை எதனில் வைத்துப்பார்ப்பது?

2011, 2012 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பம் செய்யவில்லை. இதனிடையே 2011ஆம் ஆண்டுத் தெரிவில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருவர் விண்ணப்பிக்காமலே 'கலாபூஷணம்' தெரிவு பெற்றது எப்படி?

மேற்படி விடயத்தை கலாசார உத்தியோகத்தரே பரமருக்கும் தெரிவித்து இருந்தாரென்றால் அரச விருது தெரிவிக் குழுவில் அங்கம் வகிப்பவர்களில் சுயாதிக்க தில்லுமுல்லெல்லவா?

பரமருக்கு இப்பொழுது 68 அகவை. 60 அகவை நிரம்பியவர்கள் விண்ணப்பிக்கலாமெண்ட நியதிப்படி 2005இல் அறுபது அகவையில் தொடங்கி அறுபத்தைந்து வயது வரை விண்ணப்பித்து களைச்சது தான் கண்ட அனுபவம்.

ஒரு தடவையில் விண்ணப்பம் செயவதானாலும் இரண்டு, மூன்று நாட்கள் பிரதேச செயலகத்திற்கு நடையா நடந்து, தரவுகளைப் போட்டோக்கொப்பிகள் எடுக்க காசும் செலவு செய்து நான்கு தடவைகளிலும் தோத்துப் போனால் எப்புடி இருக்கும்!.

அதால 'அண்டு விட்டன் கொண்டலடி' எண்டு பின்னால வந்த வருடங்களில் விண்ணப்பிக்கவில்லை, அரச திணைக்கள தெரிவுக் குழுக்கள் இலக்கிய நூல்கள் தெரிவு, ஆளுநர் விருது, பிரதேசரத்தினா, சாகித்திய ரத்தினா தெரிவுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்தந்தக் குழுக்களின் பெயர் விபரங்கள் மர்மமாக வைக்கப்பட்டுள்ளது. அதனை ஒவ்வொரு முறையிலும் வெளிப்படுத்த வேண்டியகட்டாயம் வலியுறுத்தப்பட வேண்டும், அப்போதே உள்ளுக்குள் நடக்கும் தில்லுமுல்லுகள் வெளிவர உதவும்.

ரெண்டு, மூண்டு நாடகங்களில் நடிச்சவர்களுக்கு 'கலாபூஷணம்' நூற்றுக்கணக்கில் கவிதைகள், சிறுகதைகள் மட்டுமா நாவல், நாடகம், செய்திகள், கட்டுரைகள் எனப்படைச்ச பரமரைக் கண்ணில் படவில்லைத் தானே!

ஐம்பது வருட இலக்கிய இருபத்தேழு வருட ஊடக பணியில் ஈடுபட்டு வரும் பரமருக்கு எந்த வித அரச விருதுகளும் வழங்கப்படவில்லை. இப்பசொல்லுங்க பாப்பம் பரமருக்கு 'சாணேற முழம் சறுக்கிற' நிலையே இல்லையோ?

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தின் கீழ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மும்முரமாக இடம்பெற்றுவருகின்றது. இதன் முதற் கட்டமாக அச்சுவேலியில் டெங்குகாய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இரண்டு வீடுகளுக்கும் ஆவரங்கால் பகுதியில் ஒரு வீட்டுக்கும் புகை அடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இம் மூவரும் டெங்கினால் பாதிக்கப்பட்டு கடந்த இரு வாரங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளனர். அவர்களில் இருவர்பாடசாலை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எம்.ஆர்)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 இற்கு கணிதபாடமும் தரம் 10 இற்கு விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் வாய்ச் சுகாதாரம் பற்றிய படக்காட்சியும், விழிப்புணர்வு கருத்தமர்வும் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகலரையும் கலந்து பயன்பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)

# முரசின் இன்றைய பலன்

(10.12.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி. நட்சத்திரம் சுவாதி. அமிர்தம் முன்னிரவு 11.49 வரை திதி, துவாதசி முன்னிரவு 9.47 வரை. இராகுகாலம் 7.49 - 9.19 வரை.

சுபநேரம் 12.19 - 1.49 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கனிவால் காரியம் சாதிப்பீர்கள். நண்பர், உறவினரின் தேவைக்கு உதவுவீர்கள். நட்பு நலம். தொழில் அபரிமித வளர்ச்சி. பண வரவில் முன்னேற்றம். புத்திரரால் மகிழ்ச்சி. |
| ரிஷபம் | படபடப்பான நாள். பணப்பற்றாக்குறை இருக்கும். போட்டிகளை சமாளிப்பீர்கள். பணியிடத்தில் அனுசரித்துப் போங்கள். விவாதம் தவிர்க்க. உணவில் கவனம். மாலை நற்செய்தி. |
| மிதுனம் | புத்துணர்வும் செயல்களில் ஆர்வமும். தேங்கிய பணிகளை முடிப்பீர்கள். தொழில் தாராள வளர்ச்சி. பணவரவு. தாராள பணச்செலவு. சிந்தனைத் திறன். அமோகமான நாள். |
| கடகம் | குடும்பத்தை பற்றிய கவலைகள். பணிகளில் குளறுபடி, தாமதம் இருக்கும். பொறுமை நன்மை தரும். மிதமான பணவரவு. மாமன், மைத்துனர் உதவி. எல்லோரிடமும் பரிவு. |
| சிம்மம் | தவறான ஆலோசனை குழப்பம் தரும். தடங்கல்கள் வரும். சுயமான செயற்பாட்டில் வெற்றி. தொழிலில் மாற்றம். எதிர்பாராத வகையில் வருமானம். உணவில் கவனம். செலவு. |
| கன்னி | சிலரது செயல் மனவருத்தம் தரும். உதவி கேட்பவர்களால் தொந்தரவு. சேமிப்பு கரையும். வேலையில் பொறுப்புகள் கூடும். மனதில் சோர்வு. எதிலும் முன்னெச்சரிக்கை தேவை. |
| துலாம் | பேச்சு, செயலில் நிதானம் அவசியம். பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவு தாமதம். வீண் கவுரவத்தினால் இழப்பு. எதிர்பார்த்தது நடக்காத ஏமாற்றம். புத்திரர் மகிழ்விப்பர். |
| விருச்சிகம் | நற்செயல்களால் பிறர் பாராட்டுகிற நன்னிலை. தொழிலில், புதிய பரிமாணம். சராசரி வரவு. உறவினருக்கு உபகாரம். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. நண்பருடன் மகிழ்வு. ஆக்கம். |
| தனுசு | பரிசுகள் வரும். உதவியும் கிடைக்கும். தொழிலில் அதிக அக்கறை. உபரி வருமானம். உடல் நலம் பெறும். தேடிய பொருள் வந்து சேரும். சேமிப்பீர்கள். உத்தியோகத்தில் சலுகை. |
| மகரம் | செயல்களில் தடுமாற்றம். பயம். தெய்வ நினைவு. தொழிலில் அனுகூலம் குறைவு. சராசரி வரவு. அறிமுகம் இல்லா இடத்தில் நுழைய வேண்டாம். மனைவி வழி உறவால் உதவி. |
| கும்பம் | நிதானம், புத்திசாலித்தனத்தால் நற்பலன். தொழில் வளர தேவையான பணிபுரிவீர்கள். இலாபம் அதிகரிக்கும். சொத்து சேர்க்கை. வாகன கவனம். குடும்பத்தில் மகிழ்ச்சி. தெளிவு. |
| மீனம் | உண்மை, நேர்மை செயல்கள். சமூகத்தில் வரவேற்பு. எதிர்பாராத உதவி. தொழில் தாமதம் விலகும். தாராள பணவரவு. இல்லறத்துணை அனுசரணை. அரச வகையிலும் உதவி. |

# 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து வெற்றி



(கொல்கத்தா)

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று கொல்கத்தாவில் நிறைவடைந்தது.

இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக் களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. தோல்வி உறுதி என இந்திய அணி இரசிகர்களை வாட்டியபோதும், அஸ்வின் சதமடித்து தங்களை உற்சாகப்படுத்துவார் என கொல்கத்தா இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், இந்திய அணி மேலும் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ளமுன் இரண்டாவது இனிங்ஸை இழந்தது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற் காக இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 183 பந்துகளை எதிர்கொண்ட அஸ்வின் 15 பவுண்டரிகள் அடங்கலாக 91 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன், பின் தலா மூன்று, ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

47 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டா வது இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு, ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அஸ்வின், ஓஜா ஆகியோரின் பந்து வீச்சு அமைந்திருந்தது. நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்த இங்கிலாந்து அணி, தொடர்ந்து 7, 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் அடுத்து களமிறங்கிய இயல் பெல் இந்திய பந்துவீச்சாளர்களை புரட்டியெடுத்து, அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதி யில் இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பெல் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அஸ்வின் இரண்டு, ஓஜா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக குக் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இந்தியா முதல் இனிங்ஸ் 316. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 523.

## ஆபத்தை விளைவிக்காத விபரீதம்



(பெங்களூர்)

பார்வையற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அப்பாசி, குடிநீர் என நினைத்து பினாயிலை (கார்பாரிக் அமிலம் கலந்த நீர்) குடித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

பார்வையற்ற வீரர்கள் பங்கேற்கும் உலக கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவில் நடை பெற்று வருகின்றது. பாகிஸ்தான் பார்வையற்றோர் அணியினர் பெங்களூரில் உள்ள விடுதியில் தங்கி யுள்ளனர். இந்த அணியின் ஜெசன் அப்பாசி (வயது-28). காலையில் சாப்பிட்டபின்,அங்கிருந்த டேபிளில் இருந்த குடிநீரைக் குடித்தார். பின் தான் தெரிந்தது அது, பினாயில் (கார்பாரிக் அமிலம் கலந்த நீர்) என்று.உடனடியாக, தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அப்பாசி, சிகிச்சைக்குப் பின் நலமாக உள்ளார்.

## தோல்வியின் எதிரொலி யுவராஜ், சகீர் நீக்கம்




(கொல்கத்தா)

இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடர் தோல்விகள் காரணமாக இந்திய அணியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன அந்த வகையில் சகீர்கான், ஹர்பஜன்சிங், யுவ்ராஜ்சிங் அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. நடைபெற்ற 3 போட்டிகளில் இங்கிலாந்து அணி 2 – 1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்திய அணி தொடர்ந்து இரண்டு போட்டிகளில் தோல்வி அடைந்த நிலையில், நாக்பூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் வீரர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அணியில் யுவ ராஜ் சிங், சகீர்கான் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். மேலும், அவர்களுக்கு பதில் ரவிந்தர் ஜடேஜா, சாவ்லா மற்றும் பர்விந்தர் அவானா இந்திய அணி யில் சேர்க்கப்பட்டுள்ளனர். நாக்பூர் டெஸ்டிற்கான இந்திய அணி வருமாறு: கௌதம் கம்பீர், சேவாக், சச்சின் டெண்டுல்கர், புஜாரா, ஹோலி, டோனி, ஜடேஜா, அஷ்வின், அசோக் டிண்டா, பிராக்யன் ஓஜா, ரஹானே, சாவ்லா, இஷாந்த் ஷர்மா, முரளி விஜய், பர்வீந்தர் அவானா.

## பொறுத்தால் பூமி ஆழ்வார்



டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் பொறுமையே முக்கியம். எங் களைப் பொறுத்த வரை நடந்து முடிந்த மூன்று டெஸ்ட் போட்டி களில் பொறுமையாக ஆடவில்லை. அதன் பலனாகவே கொல் கத்தாவில் தோல்வியைத் தழுவவேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது என இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்தார். கொல்கத்தா ஆடுகளத்தில் முழுத்திறமைக்கு ஏற்ப ஆடினோம் என்றால், இங்கு பெரிய ஓட்ட எண்ணிக் கையை குவிப்பதில் எந்தக் கடினமும் கிடையாது. இது டெஸ்ட் கிரிக்கெட். இதில் பொறுமையாக ஆட வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று. அதனை செய்ய நாங்கள் தவறி விட்டோம். ஆனால் எங்களை விட இங்கிலாந்து வீரர்கள் நிதானமாக விளையாடினார்கள். அவர்களது துடுப்பாட்டம் உண்மையிலேயே சிறப்பாக இருந்தது. இந்த வகையில் எல்லாப் பெருமையும் குக் மற்றும் அவர்களது துடுப்பாட்ட வீரர்களையே சாரும். கடந்த இரு டெஸ்டுகளில் நாங்கள் போதுமான ஓட்டங்களை குவிக்கவில்லை. முதல் இனிங்ஸில் 500 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கும் போது, அந்த போட்டியில் நிலைமையே மாறி விடும். 4ஆவது நாள் ஆட்டம் எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஆடுகளம் அப்படி ஒன்றும் மோசமாக இல்லை. ஆனாலும் ஒரே பகுதியில் நாங்கள் (உணவு இடைவேளையில் இருந்து தேநீர் இடைவேளை வரை) 6 விக்கெட்டுகளை இழந்தோம். தோல்விக்கு முக்கிய காரணமாக இது அமைந்து விட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிறீமியர் லீக் முடிவுகள்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் ஆர்சனல், சௌதம்டன், செல்சீ, நோர்விச் அணிகள் வெற்றி பெற்றுள்ளன. அஸ்டன் வில்லா-ஸ்ரோக், விகான் அத்லட்டிக் - குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டிகள் சமநிலை யில் முடிவடைந்தன.

ஆர்சனல், வெஸ்ட் ப்ரோம்விச் அணிகளுக்கு இடையிலான போட்டியில் ஆர்சனல் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக 26ஆவது, 64ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டிருந்தன. அஸ்டன் வில்லா, ஸ்ரோக் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் கோல்கள் எவையும் பெறப்படாது சமநிலையில் நிறை வடைந்தது. சௌதம்டன், ரெடிங் அணிகளுக்கு இடையிலான போட்டியில் சௌதம்டன் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

சௌதம்டன் அணி சார்பாக 41ஆவது நிமிடத் தில் கோலொன்று பெறப்பட்டது.

செல்சீ, சன்டர்லான்ட் அணிகளுக்கு இடை யிலான போட்டியில் செல்சீ அணி 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. செல்சீ சார்பாக 11ஆவது, 45ஆவது, 48ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.

சன்டர்லான்ட் அணி சார்பாக 66ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

நோர்விச், ஸ்வன்சீ அணிகளுக்கிடையிலான போட்டியில் நோர்விச் அணி 4-3 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. நோர்விச் அணி சார்பாக 16வது, 40, 44, 77ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு, ஸ்வன்சீ அணி சார்பாக 51, 59, 90ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன. விகான் அத்லட்டிக், குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டி 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

விகான் அத்லட்டிக் அணி சார்பாக 18, 74 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு, குயீன்ஸ் பார்க்ரேஞ்சர்ஸ் அணி சார்பாக 25,71 ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

# தொடரை வென்றது பங்களாதேஷ்

(டாக்கா)

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியை போராடி வென்றதன் மூலம் ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் அணி கைப்பற்றிக்கொண்டது.

பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி டாக்கா வில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் முதலில் ஆடிய மேற் கிந்தியத்தீவுகள் அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பொல்லார்ட் 74 பந்துகளில் எட்டு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பிராவோ 51 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர் களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் இஸ்லாம் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 218 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, ரோச்சின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியதுடன் முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 30 ஓட்டங் களுக்குள், அவரிடமே பறிகொடுத்தது. இருப்பினும் நான்காவது விக்கெட்டுக் காக இணைந்த முஷ்பிகிர் ரஷீம், முகமுதுல்லா ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலி ருந்து பங்களாதேஷ் அணி மீண்டது. நான்காவது விக்கெட்டுக்களை 91 ஓட்



டங்கள் பெறப்பட்ட நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சுனில் நரை னும், ரோச்சும் நெருக்கடி கொடுத்தபோதும் நசிர் உசைன் சிறப்பான முறையில் ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் பங்களாதேஷ் அணி 44 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் முஷ்பிகிர் ரஹீம் 44, முகமுதுல்லா 48, நசிர் உசைன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோச் ஐந்து, சுனில் நரைன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக முகமுதுல்லா, தொ-டர் நாயகனாக ரஹீம் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் அணி 3-2 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

# இணைச் சம்பியன்

(மானிப்பாய்)

பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய்இந்து, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கள் இணைச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நீண்ட காலத்துக்குப் பின்னர் நடத்திய பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப்போட்டி கடந்த மூன்று நாட்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.




இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தகுதி பெற்றன. இரு அணிகளுமே யாழ். மாவட்டத்தில் கால்பந்துப் போட்டியில் பிரபல்யம் மிக்க அணி என்பதால் இப்போட்டி விறுவிறுப்பாக இடம்பெறும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது.

இதேபோன்று முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதுடன் இரு அணிகளும் உற்சாகத்துடன் மோதிக் கொண்டன. கோல் போடும்முயற்சியை இருஅணிகளுமே தீவிரமாக மேற்கொண்டன. மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர் ஜீவராஜ் மிகச் சிறப்பான முறையில் கோல் ஒன்றைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வேகம் கொண்டு செயற்பட்டது. இந்தவேளை, தண்ட உதை வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, அதனைச் சிறந்த முறையில் பயன்படுத்தி கோலாக்கியது. இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.






தொடர்ந்து இரண்டாவதுபாதி ஆட்டத்தின் முற்பகுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர் சபேசன் தண்ட உதை வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி கோலாக்கினார். தொடர்ந்து கோல் போடும் முனைப்புடன் செயற்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, இறுதி நேரத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டு போட்டியை சமப்படுத்தியது. இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் இருந்த வேளை போட்டி நிறைவுக்கு வந்தது.இதன்காரணமாக இரு அணிகளுமே இணைச் சம்பியன்கன் என போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1-0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வின் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தைச்சேர்ந்த உயர் அதிகாரிகள்,கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு போட்டியைக்கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

(93)

# பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

## முல்லைத்தீவை வென்றது யாழ். மாவட்டம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்டத் தெரிவு அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடர் வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடத்திற்கான மாகாணத்திலுள்ள மாவட்டத் தெரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த ஆறாம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணியும், யாழ். மாவட்டத்தெரிவு அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணி சிவலக்ஷன், நிலோஜன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணி 16.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் சிவலக்ஷன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், நிலோஜன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மாவட்டத் தெரிவு அணி 3.2 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிளமிங், மிதுசன் தலா ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். (எஸ்.பி.)

## வென்றது கொக்குவில் இந்து

(யாழ்ப்பாணம்)

நெல்லிடிய மத்திய மகாவித்தியாலய அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சகல விக்கெட்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருஷிகன் 20 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். சிறப்பான முறையில் பந்து வீசி சானுஜன் 7 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் மத்திய கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் தனுசன் 53, பானுஜன் 27, சாகஜராஜசில்வா 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

85 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சகல விக்கெட்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்று 16 ஓட்டங்களாலும் இனிங்ஸாலும் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் எந்தவொரு வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்துவீச்சில் சாகஜராஜசில்வா 4, சாருஜன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# றக்பி பயிற்சி முகாம்

## சென். ஜோன்ஸில் இன்று ஆரம்பம்

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் றக்பி விளையாட்டை வளர்க்கும் முகமாக இலங்கை றக்பி சம்மேளனத்தினால் வடமாகாண பாடசாலை வீரர்களுக்கான மூன்று நாள் றக்பி பயிற்சி முகாம் இன்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை வீரர்கள் இப்பயிற்சி முகாமில் பங்குபற்றவுள்ளனர்.

பயிற்சி முகாம் நிறைவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும், இலங்கை றக்பி சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எஸ்.பி.)

சில வாரங்களுக்கு முன்னால் இந்திய காவல்துறையினர், முகப் புத்தகத்தில் எதுவித தீங்கும் அற்ற ஒரு கருத்தைப் பதிவு செய்ததற்காக 21 வயதான ஒரு இளம் பெண்ணை கைது செய்ததின் மூலம் பொதுமக்களின் மிகப் பெரும் கண்டனத்துக்கு ஆளாகும் நிலையை உருவாக்கினார்கள். ஏன்? ஒரு அரசியல்வாதியின் மரணத்தை அடையாளப் படுத்துவதற்கு மும்பை பெருநகரத்தை ஒரு நாள் முழுவதும் இயங்காமல் நிறுத்திவைக்க வேண்டுமா என்கிற ஒரு கேள்வியை உருவாக்கியது அல்லது ஊக்குவித்தது என்று மாற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்த நினைத்தது, சில கருத்துக்களை வெகு சாதாரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது, அவைகளை பரப்புவதற்கு அனுமதிக்க முடியாது என்பதையே.

அந்த அரசியல்வாதியை பின்பற்றுபவர்கள் தங்கள் குறிப்பை மராத்தியர்கள் அறிந்து கொள்வதற்காக அதிகாரபூர்வ மற்றும் அதிகாரபூர்வமற்ற முகவர்களை ஒன்று திரட்டினார்கள். ஆத்திரமடைந்த கூட்டம் அந்த பெண்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த காவல் நிலையத்துக்கு வெளியே ஒன்று திரண்டது மற்றும் குண்டர்கள் அவர்களது உறவினர் ஒருவருக்கு சொந்தமான மருத்துவமனை ஒன்றையும் தாக்கினார்கள்.



# உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதன் மூலம் பிரபலமடைந்து கொண்டிருந்தவர் பால் தக்கரே!

**காத் நோபிள் கட்டுரையிலிருந்து.**

அவள் எழுப்பியிருந்தாள். அந்தக் குறிப்பை விரும்பிய அவளது நண்பர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். முதலில் அவர்களுக்கு எதிராக, மத உணர்வுகளை சீண்டிவிடும் நோக்கில் அல்லது ஒரு வகுப்பினரின் மதத்தை அல்லது மத நம்பிக்கையை அவமதிக்கும் விதத்தில் வேண்டுமென்றே தீய செயல்களை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. பின்னர் பகை, வெறுப்பு, மற்றும் வகுப்பினரிடையே தவறான எண்ணங்களை வளர்க்கும் அறிக்கைகளை

சொந்தமான மருத்துவமனை ஒன்றையும் தாக்கினார்கள். தாங்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தது தங்கள் அதிர்ஷ்டமே என அவர்கள் எண்ணியிருப்பார்கள்.

சிவசேனா நிறுவனர் பால் தக்கரேயின் மரபு அப்படித்தான் இருந்தது. அந்த மனிதர் ஒருபோதும் ஒரு முதலமைச்சர் என்ற அளவில்கூட இருந்ததில்லை. ஆனால் அவர் மகாராஷ்டிராவில் மிகப் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தார். மற்றும் அவர் மிகவும் சர்ச்சைக்குரியவராகவும் கூட இருந்தார். அடோல்ப் ஹிட்லர் பாணியில் மிகவும் ஜனரஞ்சகமானவராக இருந்தார். அவர் தொடர்ந்து வெளி மாநிலத்தவர்களுக்கு எதிராக ஆட்களைத் திரட்டி போராட்டம் நடத்தி வந்தார். மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளை வெளிப்படையாகவே ஊக்கப்படுத்தினார்.

1966இல் அவரது முதலாவது தசாரா பேரணியின் பின்னர் அவரது ஆதரவாளர்கள், தென்னிந்திய கடைகளையும் மற்றும் உணவு விடுதிகளையும் தீயிட்டுக் கொளுத்தினார்கள். சுதந்திரத்துக்குப் பிறகு மாநிலத்தில் இடம்பெற்ற முதலாவது அரசியல் படுகொலைக்கு அவர்களே பொறுப்பாளிகள் - 1970இல் இடம்பெற்ற கம்யுனிஸ்ட் கட்சித் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான கிருஷ்ண தேசாய்தான் அப்படி கொலை செய்யப்பட்டவர். மேலும் 1974இல் மற்றொரு தாக்குதல் குழு என்று அறிவித்து அவர்கள் தலித் தலைவர் பகவத் ஜாதவ் அவர்களைக் கொலை செய்தார்கள்.

மும்பை நகரத்தில் 1992 மற்றும் 1993 களில் அநேக தடவைகள் இடம்பெற்ற கலவரங்களில் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மாநில அரசால் அமைக்கப்பட்ட ஒரு விசாரணை ஆணைக்குழு மோசமான குற்றங்கள் இடம்பெற்றதுக்கான பழியை சிவசேனாமீது போட்டிருந்தது - அந்த அமைப்பின் சட்டப்பேரவை அங்கத்தவர்கள்கூட பால் தக்கரே தங்களை தனிப்பட்ட முறையில் அழைத்து, முஸ்லிம்களை கொலை செய்யும்படி ஆணையிட்டார் என்று சாட்சியம் அளித்திருந்தார்கள்.

ஆய்வாளர்கள், அவரது வழமையான அருவருத்தக்க வெளிப்பாடுகள், அடோல்ப் ஹிட்லருடையதை போல உண்மையானதல்ல. தான் என்ன சொல்கிறேன் என்பதை அவரேகூட நம்பவில்லை. அவர் உணர்ச்சிகளை மாத்திரம் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார், அவைகள் தன்னை பிரபலப்படுத்தும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். ஆனால் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது அத்தனை சுகமானதாக இருந்திருக்கச் சாத்தியமில்லை. கடந்த பல வருடங்களாக காவல்துறை உத்தியோகத்தர்கள் உட்பட ஏராளமான மக்களை தனது செயற்பாடுகளுக்காக வஞ்சகமான முறையில் சிவசேனா மாற்றியுள்ளது.

அதிர்ஷ்டவசமாக மகாராஷ்டிரா இன்னமும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே உள்ளது. மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் பொறுத்தமட்டில், அந்தப் பெண்களின் கைது சம்பந்தமான பொதுமக்களின் கோபம் ஒரு உடனடி விளைவை ஏற்படுத்தியது. டில்லி உச்ச நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்கும் விதமாக உச்ச நீதிமன்றம் மாநில அரசாங்கத்திடம் இதுபற்றி விளக்கம் கோரியிருந்தது, அத்துடன் பொறுப்புள்ள மத்திய அரசு பேச்சு சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்காக வரையப்பட்ட சட்டவாக்கங்களின் பயன்பாட்டுக்கு புதிய வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தது.

# கமல் விஸ்வரூபம்!

**- யுவகிருஷ்ணா -**



கமல் எப்போதுமே மந்தையிலிருந்து பிரிந்து தனியே செல்லும் ஆடுதான். இந்த தோற்றத்தை அவர் வலிந்து உருவாக்குகிறார் என்றொரு விமர்சனம் உண்டு. எனக்கென்னவோ அவரது இயல்பே இதுதானென்று தோன்றுகிறது.

ஒருவகையில் கமல் “நிகழ மறுத்த அற்புதம்”தான். அவருக்கு பலவருடம் பின்னால் வந்தவர்களெல்லாம் அவரை தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அதேநேரம் தமிழ் சினிமாவுக்கு புது இரத்தம் பாய்ச்சும் பணியை அவர் தவம் போல மேற்கொண்டு வருவதை மறுக்க முடியாது. குறிப்பாக அதிசமீபத்திய தொழில்நுட்பங்களை தமிழில் அறிமுகப்படுத்திப் பார்த்துவிட வேண்டும் என்கிற அவரது வெறி முக்கியமானது. இதனால் கமலுக்கு தனிப்பட்ட முறையில் ஏராளமான பொருளிழப்பு என்றாலும், சினிமாவுக்கு இலாபம்தான்.

திருட்டு வீடியோ கசட் காலத்திலிருந்தே தொழில்நுட்பங்களை மிகச்சரியாக புரிந்துகொண்டு, அதற்கேற்ப சினிமாவில் மாற்றங்கள் தேவை என்று வலியுறுத்தி வருகிறார். தொழில்நுட்பத்தை சபிக்கக்கூடாது. அதை நமக்கு வாகாக எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென சிந்திக்க வேண்டும் என்பது அவரது கட்சி.

லேட்டஸ்ட்டாக விஸ்வரூபம் பிரச்சினை. கிட்டத்தட்ட கோவணத்தை கூட அடகு வைத்து படம் எடுத்திருக்கிறார். இப்போதிருக்கும் வியாபார முறையை வைத்துக்கொண்டு இப்படத்தை காட்சிப்படுத்தினால், தலையில் துண்டை போட்டுக் கொண்டு காசி, இராமேஸ்வரம் என்று தயாரிப்பாளர் கமல் போயாகவேண்டும். “வீடியோ ஒன் டிமாண்ட்” மூலமாக வெளியிடுவதின் மூலம் பெரிய இலாபத்தை காணமுடியுமென்று சொல்கிறார். குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டி பழகிய தமிழ் திரையுலகினர் வழக்கம்போல குதித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இன்று குதித்துக் கொண்டிருப்பவர்கள்தான் இதே முறையில் பல கோடிகளை குவிக்கப் போகிறார்கள். ஏனெனில் கமலின் ராசி அப்படி. அவர் அறிமுகப்படுத்தும் விஷயங்களின் அறுவடையை மற்றவர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அவருக்கு உழக்குதான் மிச்சம்.

சம்பாதிக்கும் எல்லாப் பணத்தையும் திரும்பத் திரும்ப சினிமாவிலேயே முதலீடு செய்யும் கமல்ஹாசன், சினிமாவை அழிக்கும் முயற்சிகளில் இறங்கமாட்டார் என்று நம்பலாம். படமெடுக்கும் முதலாளி என்கிற அடிப்படையில் அவர் “இலாபம்” எதிர்பார்ப்பது நியாயம்தான். கமல் வெறும் கலைஞன் மட்டுமல்ல.

சினிமா என்பது சர்வநிச்சயமாக வணிகம்தான். இதை சினிமாக்காரர்கள் ஒப்புக்கொள்வதில் “ஈகோ” இருக்கலாம். கலை, பொழுதுபோக்கு ஆகிய அம்சங்களை தாண்டி, சினிமாவின் குறிக்கோள் பணம் ஈட்டுவதே. ஹொலிவுட்டுக்கு நெருக்கமாக தொழில்நுட்பரீதியாக நாம் வளரும் அதே நேரத்தில், அவர்களது வியாபார யுக்திகளையும் கைக்கொண்டாக வேண்டும். தினகரன் பத்திரிகையின் வெள்ளிமலரில் (டிச.7, 2012) “தயாரிப்பாளரே இல்லாமல் சினிமா” என்றொரு கட்டுரை வெளியாகியிருக்கிறது (சினிமா ஆர்வலர்கள் நிச்சயம் வாசித்தே ஆகவேண்டிய கட்டுரை). தயாரிப்பாளரே இல்லாமல் பலரும் சேர்ந்து முதலீடு செய்து படம் தயாரிப்பது என்கிற முறையை குறித்து அக்கட்டுரை ஆழமாக அலசுகிறது. சினிமாத்தொழில் இப்படியெல்லாம் மாறிக்கொண்டிருக்கும் சூழலில் கமல்ஹாசன் கலையை அழிக்கிறார், இண்டஸ்ட்ரியை பாழாக்குகிறார் என்றெல்லாம் பேசுவது பிற்போக்குத்தனம்.

முதல் போடுபவர்கள் இலாபத்தை எடுத்தாக வேண்டும். பணம் எடுக்க என்னென்ன யுக்திகள் இருக்கிறதோ, அத்தனையையும் பிரயோகித்துப் பார்த்தாக வேண்டும். சூதாட்டம் மாதிரியில்லாமல் மற்ற தொழில்களைப் போலவே பணம் போடுபவர்களுக்கு, குறைந்தபட்ச உத்தரவாதத்தை சினிமா வழங்கியாக வேண்டிய காலகட்டத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

# அம்பலமாகும் பன்னாட்டு நிறுவனங்கள்





பன்னாட்டு நிறுவனங்களைத் தீவிர அச்சத்துடன் பார்ப்பவர்களின் சந்தேகங்களை உறுதி செய்யும் தகவல் இது. உலகில் உள்ள 43,000 பன்னாட்டு நிறுவனங்களின் நிதியாதாரங்களை ஆராய்ந்த ஆய்வுக்குழு ஒன்று அதிர்ச்சியளிக்கும் முடிவுக்கு வந்திருக்கின்றது. இந்த நாற்பதாயிரம் பன்னாட்டு நிறுவனங்களும் அவற்றின் மையத்தில் உள்ள 1318 நிறுவனங்களுக்கு உரிமையானவை.

இந்த 1318 நிறுவனங்களுக்கே நாற்பதாயிரம் பன்னாட்டு நிறுவனங்களின் மொத்த வருமானத்தில் 80 வீதம் போய் சேருகிறது. இந்த 1318 பன்னாட்டு நிறுவனங்களும்கூட 147 நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த 147 நிறுவனங்களும் கூட ஒன்றோடொன்று இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றிலொன்று முதலீடு செய்திருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் சொத்தில் 40 வீதம் இவற்றின் கையில் உள்ளது - பன்னாட்டு நிறுவனங்களில் நாற்பது சதவிகித நிறுவனங்களை ஒரு சதவிகிதத்துக்கும் குறைவான நிறுவனங்களே நிர்வகிக்கின்றன. இது உலக பொருளாதாரத்துக்கு ஒரு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது - இந்த ராட்சத நிறுவனங்களில் ஒன்று பாதிக்கப்பட்டாலும், அதன் சீர்கேடு துணை நிறுவனங்களுக்குத் தொற்றி உலகப் பொருளாதாரத்தையும் அழிக்கக் கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள்.

# அழியாத ஓவியம்



☆ லியனார்டோ டாவின்சியின் அழியாப் புகழ் பெற்ற ஓவியம் மோனாலிசா ஆகும்.

☆ நிகரற்ற அழகும் செல்வமும் ஒருங்கே இணையப் பெற்ற "லிசாகொர்டினி" என்ற பெண்ணின் உருவம்தான், "மோனாலிசா" ஆகும். பிளாரென்ஸ் நாட்டைச் சேர்ந்த அவள் கணவனின் பெயர் மெஸ்ஸா கியோ கோண்டா என்பது ஆகும்.

☆ தனது 21ஆவது வயதில் டாவின்சி படம் வரைவதற்காக லிசா உட்கார்ந்திருந்தாள். ஆனால் ஓவியத்தை டாவின்சி, வரைந்து முடிப்பதற்கு ஆறுவருடங்கள் ஆகிவிட்டன.

☆ மோனாலிசா படத்தைப் பார்த்தால் அதில் அவள் கறுப்பு உடை அணிந்திருப்பதும் மோதிரம் அணியாமல் இருப்பதும் தெரியும். அதற்குக் காரணம் யார் தெரியுமா?

அந்தப்படம் வரைய ஆரம்பிப்பதற்குச் சில தினங்களுக்கு முன்பு லிசா கொர்டினியின் குழந்தை இறந்தது. அதற்குத் துக்கம் அனுஷ்டிக்கத்தான் அவள் அவ்வாறு கறுப்பு உடையில் காணப்படுகிறாள். அந்தப்படம் வரைய ஆறு வருடங்கள் ஆனாலும் முதலில் இருந்த சூழ்நிலையிலேயே டாவின்சி வரைந்திருக்கிறார்.

☆ மோனாலிசா ஓவியத்தை லியனார்டோ டாவின்சி அழியாப் பொக்கிஷம் என்றே கருதி வந்தார். அவர் அதை வரைந்த பின்னர், ஒருவருக்கும் கொடுக்கவில்லை.

☆ பின்னர் அந்த ஓவியத்தை பிரான்ஸின் மன்னருக்கு 12 ஆயிரம் பிராங்குகளுக்கு விற்றார் டாவின்சி.





கிராம்பு என்பது ஒரு வகை பூ.

மரத்தில்தான் இந்தப் பூ விளைகிறது.

ஒரு மரத்தில் 80 வருடங்கள் வரை இது பூக்கும்.

உலகத்தின் தேவையில் 80 சதவீதத்துக்கு மேல் கிராம்பு ஜான்ஸிபாரிலிருந்துதான் சந்தைக்கு வருகிறது. ஜான்ஸிபார் கிழக்கு ஆபிரிக்கா ஓரமாக உள்ள ஒரு தீவாகும்.

# நெப்போலியன் மீது புகார்!



சின்ன வயதில் நெப்போலியன் இராணுவ விடுதியிலே படித்துக்கொண்டிருந்த சமயம்... அவருடன் தங்கியிருந்த இன்னொரு மாணவனுடைய அழகான பை ஒன்று காணாமல் போய்விட்டது. உடனே அந்த மாணவன் மேலதிகாரியிடம் போய் புகார் கொடுத்தான்.

"யார் மேலாவது உனக்குச் சந்தேகம் உண்டா?" என்று மாணவனிடம் மேலதிகாரி கேட்டார்.

மாணவன், நெப்போலியன் மீதுதான் சந்தேகம் என்றான்.

உடனே மேலதிகாரி நெப்போலியனை தன்னுடைய அறைக்குக் கூப்பிட்டார்.

நெப்போலியன் மெதுவாக அறைக்குள் நுழைந்தார்.

என்ன... ஏது என்று விசாரிக்காமலே உடனே பிரம்பைக் கையிலே எடுத்தார் மேலதிகாரி. கண்மண் தெரியாமல் நெப்போலியனை அடித்தார்.

"ஏன் திருடினாய்?" என்று கேட்டு நல்ல உதை. அவ்வளவு அடியும் உதையும் வாங்கிக்கொண்டு அமைதியாக நின்றார் நெப்போலியன்.

அதற்குப் பிறகு கொடுத்த தண்டனையையும் வாங்கிக்கொண்டு பொறுமையாக இருந்தார். எதுவும் பேசவில்லை நெப்போலியன்!

கொஞ்சநாள் கழித்து புகார் கொடுத்த அந்த மாணவன் அந்த அதிகாரியிடம் ஓடிவந்தான்.

"ஐயா... என்னுடைய பையை அன்றைக்குத் திருடியது நெப்போலியன் இல்லை! வேறு ஒரு மாணவன்.. இப்பத்தான் உண்மை தெரிஞ்சுது. தெரியாமல் நெப்போலியன் மீது புகார் கொடுத்துவிட்டேன் என்னை மன்னித்துவிடுங்கள்!" என்றான்.


அந்த அதிகாரிக்கு மிக ஆச்சரியம். உடனே நெப்போலியனைப் பார்த்து, "உனக்கு என்ன பைத்தியமா? நீ என்ன முட்டாளா? அன்றைக்கு அந்த அடி உதைபட்டும் நீ உண்மையைச் சொல்லவில்லையே ஏன்?" என்று கேட்டார்.

அதற்கு நெப்போலியன், அமைதியாக, "நீங்கள் என்னை அடிக்கிறதுக்கு முந்திக் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன்! அடித்துக்கொண்டே கேட்டீர்கள். அப்ப நான் இல்லை என்று சொன்னால்... அடிக்குப் பயந்துகொண்டுதான் நான் அப்படிச் சொல்வதாய் நீங்கள் நினைப்பீர்கள்... நான் பயந்ததாக யாரும் நினைக்கக் கூடாது. அதைவிட அடி, உதை வாங்குவதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை..." என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த அதிகாரி அசந்துவிட்டார்.

"தான் பயந்ததாகக்கூட யாரும் நினைக்கக்கூடாது" என்னும் எண்ணம், எப்பேர்ப்பட்ட மனோதிடம்!

**('சிந்தனை விருந்து' என்ற நூலிலிருந்து)**



# இராமாயணத்துக்குக் கம்பனின் கொடை



**பன்மொழி வல்லுநர், இலக்கிய ஆய்வாளர், பேராசிரியர் ஏ.ஏ.மணவாளன். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் பட்டங்கள் பெற்றவர். கம்ப ராமாயணத்தில் ஆழ்ந்தவர். சமீபத்தில் சென்னைக் கருத்தரங்கில் அவர் பேசியதிலிருந்து...**

வால்மீகி இராமாயண ஏட்டுச் சுவடிகள் இந்தியாவெங்கும் பல இடங்களில் கிடைத்துள்ளன. அவற்றைத் தொகுத்து, அவற்றுக்கிடையேயான வித்தியாசங்களைக் குறிக்கவேண்டும் என்ற முயற்சியை எடுத்த பரோடா பல்கலைக்கழகம், பல்வேறு இராமாயண வகைகளை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தது. அதன்படி, நான்கு பாடபேதப் பிரதிகள் இருப்பதைக் கண்டுபிடித்தது. அவை, வடமேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு. ஆக, ஒருவிதத்தில் நான்கு வால்மீகி இராமாயணங்கள் இந்தியாவில் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகின்றன, சில இடங்களைத் தவிர.

அவ்வாறு விலகிப்போகும் இடங்கள்தான் மிகவும் சுவாரசியமானவை. உதாரணமாக, தெற்கு வால்மீகி இராமாயணப் பிரதியில் மட்டும் சில புதிய விஷயங்கள் உள்ளன. இவை எவையுமே பிற மூன்று வால்மீகி இராமாயணப் பிரதிகளில் இல்லை. இது எப்படிச் சாத்தியம்?

இவை அனைத்தையும் முதலில் கம்பன் தன் இராமகாதையில்தான் எடுத்தாள்கிறான். இந்த இராமகாதையையும் வால்மீகி இராமாயணத்தையும் எடுத்துக்கொண்டு வைணவ உரையாசிரியர்கள் பொதுமக்களிடம் பிரசங்கங்களில் ஈடுபடுகின்றனர். அப்போது இரண்டிலும் சில வித்தியாசங்கள் இருப்பதைப் பார்க்கின்றனர். கம்பனின் இராமகாதையில் இருக்கும் விஷயங்களை அவர்கள் அப்போது இயல்பாக, இடைச்செருகல் சுலோகங்கள்மூலம் தெற்குப் பிரதிக்குள் நுழைத்துவிடுகின்றனர். இதன் காரணமாக மட்டுமே தெற்குப் பிரதியில் மட்டும் இவை காணப்படுகின்றன. பிற மூன்று இடங்களில் கிடைக்கும் பிரதிகளில் இவை காணப்படுவதில்லை.

அவற்றிலிருந்து ஒருசிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக்காட்டலாம்.

(1) இராமனின் பிறந்த தினம். இப்போது ராம நவமி என்று அனைவரும் இராமனின் பிறப்பைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் வடமேற்கு, வடக்கு, கிழக்குப் பிரதிகளில் இராமனின் பிறந்த நட்சத்திரம், ஜாதகம் என்று எந்தத் தகவலும் இல்லை. இவை முதலில் தமிழில் கம்பனிடம் மட்டுமே காணப்படுகின்றன. அதன்மூலம் அவை தெற்கு வால்மீகி இராமாயணப் பிரதியில் செருகப்படுகின்றன. பிற மூன்று பிரதிகளில் ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்கன பிறப்பு நட்சத்திரம் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால், தசரதனின் பிறப்பு நட்சத்திரம் தொடர்பாக எல்லாத் தகவலும் அனைத்துப் பிரதிகளிலும் உள்ளன. தசரதனுக்குத் தகவல் கொடுத்துவிட்டு, முக்கிய கதை மாந்தர்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் என்ன பொருள்?

கம்பன் எங்கிருந்தோ இந்தத் தகவலைப் பெற்றுள்ளான். இதற்கான மூலத் தகவல் கம்பனுக்கு எங்கிருந்து கிடைத்துள்ளது என்று தெரியவில்லை. (வடமேற்கு இந்தியாமூலம், குஜராத் வழியாக, கர்நாடகப் பகுதிக்கும் பின்னர் அங்கிருந்து மலையாள, தமிழ் பகுதிக்கும் இந்த இராமன் பிறப்புத் தகவல் வாய்மொழியாக வந்து, மக்களிடையே பரவியிருந்தது.) இன்று இந்தியாவெங்கும் கொண்டாடப்படும் ஒரு விழாவுக்கான நாள், நட்சத்திரத்தைக் குறித்துக்கொடுத்தவன் கம்பன்.

(2) அகலிகை கதை. தெற்குப் பிரதியைத் தவிர பிற அனைத்திலும் அகலிகை கௌதமரால் சபிக்கப்படுகிறாள். ஆனால் கல்லாகப் போ என்று சபிக்கப்படவில்லை. காற்றைப் புசித்து, வேறு அன்ன ஆகாரம் இல்லாமல் கிடப்பாய் என்றுதான் பிற மூன்று பிரதிகளிலும் சொல்லப்படுகிறது. தெற்குப் பிரதியில் மட்டும்தான் "அன்ன ஆகாரம் இல்லாமல்" என்பதற்குப் பதில் "கல்லாகக் கிடப்பாய்" என்று வருகிறது. ("வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தி" என்று பிற மூன்று பிரதிகளில் இருப்பது, தெற்குப் பிரதியில் "வாயுபக்ஷா ஷிலான்யாசா தப்யந்தி" என்று மாறிவருகிறது.) காரணம், கம்பன் மிக விரிவாக அகலிகை கல்லாகப் போவதைப் பற்றியும் அவளுடைய சாபவிமோசனம் பற்றியும் சொல்கிறான்.

அப்படியானால் கம்பனுடைய மூலம் யார்? அது பரிபாடல். பரிபாடலில் திருப்பரங்குன்றத்தைக் குறிக்கும் முருகன் பற்றிய பாடலில் "இந்திரன் பூசை இவள் அகலிகை இவன் சென்ற கவுதமன் சினன் உறக் கல் உரு" என்று வருகிறது. எனவே தனக்குமுன் தமிழகத்தில் இருந்த கதையைச் சேர்த்து கம்பன் படைத்திருக்கிறான்.

(3) இரணியன் வதைப் படலத்தை முழுவதுமாக இராமகாதைக்குள் புகுத்தியது கம்பனே. இதைப் பின்பற்றி, இந்தியாவின் பிற பகுதிகளில் எழுதப்பட்ட சில பிற்கால இராமாயணங்களிலும் இரணியன் கதை வருகிறது.

# அம்மாவின் ஆசை...



க்ரீங் க்ரீங்... க்ரீங்... க்ரீங்...

உதாரிப்ப எடுக்கினம் என்றவாறு காயத்ரி, ஹலோ... ஹலோ... என்றாள்.

அக்கா... நான் நந்தினி...

சொல்லு நந்தினி... என்ன இந்த நேரத்தில...

இல்லையக்கா... அம்மா பிடரியடிபட கிணத்தடியில விழுந்திட்டா, ஆஸ்பத்திரியில வச்சிருக்கிறம். கொஞ்சம் சீரியஸ் ஆக இருக்கு. உங்களையும் பிள்ளையையும் நெடுக கேட்டுக்கொண்டிருக்கிறா.

என்ன செய்ய... நான் வாறதே நந்தினி... உங்க ஒரு பிரச்சினையும் இல்லையே?

பிரச்சினை பிரச்சினை எண்டு உங்கயிருக்கிற நீங்கள்தான் கத்திக்கொண்டிருக்கிறீங்கள். ஒண்டும் நடக்காது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கெதியாக வாங்கோ.

என்ன... பிள்ளையையும் கூட்டிக்கொண்டோ? அவன்... இங்க... தெரியும் தானே...

அக்கா அதொரு பிரச்சினையுமில்லை கூட்டிக்கொண்டு வாங்கோ. உங்க சந்திவளிய கொடி பிடிச்சு... தெருக்களை மறிச்சவங்கள் எல்லாம் இங்க வந்து நல்லா சகலத்தையும் அனுபவிச்சுப்போட்டு போறாங்கள். பேசாமல் கூட்டிக்கொண்டு வாங்கோ, அவனுக்கு வேலைக்கு லீவை போட்டுட்டு.

சரி, அம்மாவைக் கவனமாக பார், நான் வாறன்.

ராசா... ராசா...

என்னம்மா நிம்மதியாக நித்திரை கொள்ளவும் விடமாட்டீங்கள்.

ராசா அம்மம்மா கிணத்தடியில விழுந்து ஆஸ்பத்திரியிலயாம். எங்களை கேட்டுக்கொண்டே இருக்கிறாவாம். நாங்கள் சிலோனுக்கு போக வேணும். உன்னையெல்லாம் தூக்கி வளர்த்தவ எல்லே செல்லம். உனக்கு அறுனாக்கொடி எல்லாம் செய்து தந்தா.

what is that? என்னம்மா விசர்க்கதை கதைக்கிறீங்கள்? என்னண்டம்மா சிலோனுக்கு நாங்கள் போறது? வெளிநாட்டில இருந்து போற ஆட்களை வெள்ளை வானிலை கடத்துறாங்கள். காசு பறிக்கிறாங்கள் எண்டெல்லாம் பேப்பர்ல வருகுது. அதோட நாங்கள்... இங்க...

நான் நந்தினி சித்தியோட கதைச்சனான். அவ சொல்லுறா இங்க கதைக்கிற மாதிரி ஒண்டும் இல்லையாம். அம்மம்மாக்கும் ஏதன் நடந்தாலும் நடக்குமாம். அதுதான் போவமெண்டு நினைக்கிறன்.

சரி... நான் அப்ப டிக்கெட் அலுவலை பார்க்கிறன். என்னவோ உங்களுக்காகத்தான் வெளிக்கிர்றன்.

பயப்பிடாதே ராசா... வயல்வெளி வைரவர் எங்களுக்கு ஒண்டும் வர விடமாட்டார்.

அம்மா, உதை மட்டும் எனக்கு சொல்லாதயுங்கோ. நீங்கள் வேணுமெண்டா வைரவர், சூலம், தேங்காய், மாங்காய் எல்லாத்தையும் வைச்சு கும்பிடுங்கோ. எனக்கெண்டா உதில நம்பிக்கையில்லை. ஆர் ஆரையோ எல்லாம் அழிக்கவேணும் எண்டு நேர்த்தி வச்சீங்கள். கடைசியாக என்ன நடந்தது...?

ராசா... வைரவரைப்பற்றி ஒண்டும் பேசாத... டிக்கட் அலுவல போய்ப் பார்.

*** *** ***

கொழும்புக்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்குது ராசா.

கொழும்புக்கு இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்குதம்மா.

கொழும்பு நெருங்க நெருங்க வயித்த கலக்குது ராசா.

வயித்த கலக்குதோ? சும்மா வீட்ட இருந்து கொண்டு நாசமறுத்த டீவியளையும் ரேடியோக்களையும் கேட்டுட்டு பொடியள் கலக்குறாங்கள் எண்டு கத்திப்போட்டு இப்ப வயித்த கலக்குது எண்ணுறியள். சும்மா எந்த நேரமும் வீட்டில சண்ட... சண்ட கொலை... கொலை... எண்டு கதைச்சு என்னையும் அழிச்சுப்போட்டீங்கள். என்ன செய்யப் போறாங்களோ எனக்கெண்டா தெரியா.

நீங்கள் முன்னுக்கு போங்கோ... நான் பின்னால வாறன்.

விமான நிலையத்தில் இருந்த அதிகாரியிடம் சென்ற காயத்ரி அனைத்து பற்களும் தெரியக்கூடிய வகையில் சிரித்துக்கொண்டு, ஆயுபோவன்... என்றதும்,

வணக்கம் எத்தனை நாள் நிக்கிறியள்? என்று பதில் வந்தது.

தம்பி தமிழே? நாங்கள் இரண்டு கிழமை.

என்னம்மா... இங்க தமிழ் ஆக்களையெல்லாம் சிங்கள அரசாங்கம் வேலைக் கெடுக்க மாட்டினம் எண்டு சொன்னீங்கள்? என்றான் ராசா.

சும்மா பேசாமல் வா... ஒரு கண்டம் தாண்டீட்டம்... பேந்து கதைப்பம். சும்மா ஆக்களுக்கு காட்டுறதுக்காக வச்சிருக்கிறாங்கள்.

(இவர்கள் சென்றுகொண்டிருந்த பஸ் ஓமந்தையில் நிற்கிறது. oman thai என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்ததை ராசா வாசிக்கின்றார்)

எந்த இடம் தம்பி இது?

ஓமாந்தாய் அம்மா...

என்ன தம்பி ஓமாந்தாயோ?

அருகிலிருந்த பெரியவர், இது ஓமந்தை. ஆமி செக் பண்ணப் போகுது என்றார். மீசை முளைத்ததும் முளைக்காததுமாயுள்ள இரு இராணுவ வீரர்கள் உள்ளே ஏறினார்கள்.

உன்னைப் பெத்தவள் எண்டபடியாலும் இந்தச் சனத்தின்ர அவலத்தை கண்டு அனுபவிச்சபடியாலும் சொல்லுறன்... சனம் இங்க ஓரளவுக்கு நிம்மதியாக இருக்குது. மீன் பிடிக்கப் போன அந்தோனி பாதுகாப்பாக திரும்பி வருவான் என்ற நிம்மதியோட மரியாம்மா நித்திரைக்கு போகும் நிலைமை இங்க இருக்கு. வயலுக்குப் போன வைரமுத்து உயிரோட வாற நிலைமை இங்க இருக்கு. பள்ளிக்குப் போற குழந்தைகள் பாதுகாப்பா வருவினம் எண்ட நிலைமை இங்க இருக்கு. தயவுசெய்து அங்க இருந்துகொண்டு இங்க உள்ளவையை குழப்பாதயுங்கோ. உண்மையில எதாவது உதவி செய்ய நினைச்சா அனாதைப்பிள்ளையளை படிப்பியுங்கோ. இயக்கத்துக்கு போன குற்றத்துக்காக கையை காலை இழந்து நிற்கிற எங்கட பிள்ளையளுக்கு உதவி செய்யுங்கோ...

அம்மா எங்க வாறது? என்று இராணுவ வீரர் கேட்டதும்,

என்னத்தையடா இவன் கேட்கிறான் என்று மனதுக்குள் புகைந்துகொண்ட காயத்ரி, கனடாவிலிருந்து வாறம், யாழ்ப்பாணம் போறம் என்று சொல்லிக்கொண்டு மரியாதை கலந்த அச்சத்துடன் எழும்பியதும்,

இரிங்க.. இரிங்க... என்று இராணுவ வீரன் பதிலளித்தான்.

கண்டம் இரண்டு முடிஞ்சுது... இனி சாவகச்சேரி தான் என்ற நிம்மதியுடன் இருவரும் பயணிக்கின்றனர். சாவகச்சேரியை பஸ் அடைந்ததும் அடையாததுமாக இருவரும் நந்தினியுடன் தாயைப் பார்க்கச் சென்றனர். தாயின் நிலைமை எவ்வாறு இருக்குமோ என்ற ஏக்கத்துடன் சென்ற காயத்ரி, சாவகச்சேரி ஆஸ்பத்திரியை கண்டதும் மலைத்துப்போய்விட்டாள். தான் பிறந்து வளர்ந்த சாவகச்சேரியா இது என அங்கலாய்க்கலானாள். முப்பது வருடங்கள் யுத்தத்தை எதிர்கொண்ட நாட்டிலா இப்படியொரு ஆஸ்பத்திரி என்பதை பார்த்தபோது தமிழ் ஊடகங்கள் பொறுப்பற்ற விதத்தில் பரப்பும் பொய்யுரைகளை எண்ணி ஆத்திரப்பட்டாள். தான் வசித்து வருகின்ற ஸ்காபரோ நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இருப்பினும், இந்த ஆஸ்பத்திரியைப்போல் இவ்வளவு காற்றோட்டமுள்ளதாகவும், மரம் செடி கொடிகளுடனும், புதுப்பொலிவுடனும் இல்லை.

தாயின் கட்டிலுக்கு அண்மையில் சென்ற நந்தினி, அம்மா... அம்மா அக்கா வந் திட்டா என்றதும் தாயின் கண் கள் மெதுவாக திறந்தன. கடைக் கண்ணால் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

காயத்ரி, இனி நான் இருக்க மாட்டேன். பிள்ளை, சண்டை முடிஞ்சு உன்னையெல்லாம் இப்படி பார்ப்பேன் எண்டு நான் நினைக்கேல்ல. நாங்கள் பட்ட கஷ்டம் அலைஞ்ச அலைச்சல் எல்லாம் உனக்கு தெரியாது. காசை அனுப்பிப்போட்டு நீங்கள் வசதியாக இருந்திட்டியள். நீங்கள் ஒருத்தரும் இங்க இனி வரவும் மாட்டியள்.

சரியம்மா... இப்ப வந்திட்டன் தானே... சும்மா இருங்கோ.

வந்திட்டாய், திரும்பி போகத்தான் போறீங்கள். இருக்கவே வந்தனீ? உப்பிடித்தான் தங்கம்மா அக்காவும் முந்தி வந்தாள். இது எங்கட சொந்த மண்... இங்க தான் சாகப்போறன் எண்டாள். பேந்து பார்த்தால் மாங்குளத்து காணியை இவன் சுந்தரம் கேக்க கேக்க குடுக்காமல் யாரோ சிங்கள ஆளுக்கு அம்பதினாயிரம் ரூபா கூட வைச்சு வித்துட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிட்டாள்.

அம்மா உந்த கதையளை விடுங்கோம்மா.

உதுகள் உங்களுக்கு பிடிக்காதுதான். தெரியும். உன்னைப் பெத்தவள் எண்டபடியாலும் இந்தச் சனத்தின்ர அவலத்தை கண்டு அனுபவிச்சபடியாலும் சொல்லுறன்... சனம் இங்க ஓரளவுக்கு நிம்மதியாக இருக்குது: மீன் பிடிக்கப் போன அந்தோனி பாதுகாப்பாக திரும்பி வருவான் என்ற நிம்மதியோட மரியாம்மா நித்திரைக்கு போகும் நிலைமை இங்க இருக்கு. வயலுக்குப் போன வைரமுத்து உயிரோட வாற நிலைமை இங்க இருக்கு. பள்ளிக்குப் போற குழந்தைகள் பாதுகாப்பா வருவினம் எண்ட நிலைமை இங்க இருக்கு. தயவுசெய்து அங்க இருந்துகொண்டு இங்க உள்ளவையை குழப்பாதயுங்கோ. உண்மையில எதாவது உதவி செய்ய நினைச்சா அனாதைப்பிள்ளையளை படிப்பியுங்கோ. இயக்கத்துக்கு போன குற்றத்துக்காக கையை காலை இழந்து நிற்கிற எங்கட பிள்ளையளுக்கு உதவி செய்யுங்கோ என்று கூறிவிட்டு...

மேலும் ஏதோ சொல்ல முற்பட்ட வேளை அவளது தலை தலையணை மேல் சரிந்துகொண்டது.

- கவிதா (கனடா)

# சகல மதங்களும் ஒன்றுதான் பிரித்துப் பார்க்க கூடாது

## - கட்டளைத் தளபதி பிரதீப் டி சில்வா

(கிரு-சிகரம்)

அனைத்து மதமும் ஒன்றுதான். மதங்களை யாரும் பிரித்துப் பார்க்கக்கூடாது என யாழ்ப்பாணம் 513 ஆவது படை கட்டளைத் தளபதி பிரதீப் டி சில்வா குறிப்பிட்டார்.



யாழ். உடுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள நந்தாராம அறநெறிப்பாடசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு வங்கி கணக்கு புத்தகங்கள் மற்றும் தர்ம போதனை புத்தகங்கள் வழங்கும் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

30 வருட கால போருக்கு பின் தற்போது யாழ்ப்பாண மாணவர்களை நல்வழிப் படுத்தவும், எதிர்காலத்தில் நற்பிரசைகளாக வாழ வேண்டும் என்பதற்காகவும், தமிழ் பௌத்த சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட நந்தாராம அறநெறிப் பாடசாலையையும் கல்விகற்கும் மாணவர்களையும் பார்க்கும் போது மகிழ்ச்சி அளிப்பதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

தற்போது போரினால் பாதிக்கப்பட் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இராணுவத்தினர் பல்வேறு இடங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கருத்தரங்குகள் மற்றும் பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நந்தாராம அறநெறிப் பாடசாலையில் கல்விகற்று . வரும் 52 மாணவர்களில் முதல் கட்டமாக 25 மாணவர்களுக்கு சுவிட்சர்லாந்தில் இயங்கி வரும இந்து - பௌத்த சங்கத் தலைவர் லோகேஸ்வரனால் திறப்பதற்கு நிதியினை வளங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத் தலைவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆசிவழங்கியதுடன், தமிழ் - பௌத்த சங்கத தலைவர், செயலாளர், உப செயலாளர், அங்கத்தவர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இஸ்லாமிய மாணவர்களுக்கு புத்தாண்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் இஸ்லாமிய புத்தாண்டு போட்டிகள் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றன.

யாழ்.மாவட்ட அஹதியா சன்மார்க்க போதனாபீடம் பாடசாலை, மத்ராஸா மாணவர்களுக்காக பல்வேறு இஸ்லாமிய மார்க்க பொது அறிவுப் போட்டிகளை நடத்தியது.

யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிவாசல்களில் கடமை புரியும் உலமாக்கள் இப்போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களை தெரிவு செய்தனர்.

இதேவேளை சகலரும் பங்குபற்றக் கூடிய கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கான ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு பின்னர் அறிவிக்கப்படும். (105)

## யாழ் - ஊர்காவற்றுறைக்கான பேருந்து சேவை அட்டவணை

(யாழ்ப்பாணம்)

பொது மக்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வழி இல. 777, 780 ஆகிய மார்க்கங்களில் இ.போ.ச. மற்றும் தனியார் இணைந்த நேர அட்டவணைப் படி சேவைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான நேர அட்டவணையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 780 வழி இலக்க தனியார் பேருந்துகள் ஊர்காவற்றுறைக்கு வந்து சேரும் நேரமாக காலை 4.30, 5.00, 5.50, 6.15, 7.10, 8.20, 9.30, 10.30, 11.00, 11.30, 12.30, 1.00, 1.30, 2.30, 3.00, 4.00 ஆகும்.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு புறப்படும் நேரமாக காலை 5.00, 5.25, 6.15, 6.40, 7.45, 8.55, 10.00, 11.00, 11.30, 12.00, 1.00, 1.30, 2.00, 3.00, 3.30, 4.45, ஆகும்.

மேலும் இ.போ.ச பேருந்துகள் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஊர்காவற்றுறைக்கு வந்து சேரும் நேரமாக 5.25, 6.40, 7.45, 8.55, 10.00, 12.00, 2.00, 3.30, ஆகும்.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு புறப்படும் நேரமாக 5.50, 7.10, 8.20, 9.30, 10.30, 12.30, 2.30, 4.00 ஆகும்.

(தொடரும்....)



திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட முன்னாள் ஆயர் லியோ ராஜேந்திரம் அன்ரனி ஆண்டகையின் இறுதி அஞ்சலி நிகழ்வு திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெற்ற போது, கிறிஸ்தவ மத தலைவர்கள் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதைக் காணலாம். (எஸ்.பி)

## வேலை வாய்ப்புச் செய்திகள்

இல.105, இராஜ வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள லக்ஷ்மி இஞ்சினியரிங் நிறுவனத்துக்கு லேத், மில்லிங், வெல்டிங் வேலைகளுக்கான வெற்றிடம் உண்டு. அகவை 20 தொடக்கம் 50 வயதிற்கு உட்பட்ட 2 வருடங்களுக்கு குறையாத முன்அனுபவமுள்ளவர்கள் மட்டும் விரும்பத்தக்கது. லேத், மில்லிங் வேலைகளுடன் வெல்டிங் வேலையும் தெரிந்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுடையோர் தங்கள் சுயவிபரக்கோவையுடன் எதிர்வரும் 12.12.2012 தொடக்கம் 13.12.2012 வரை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரைக்கும் நேரில் வரவும்.

---

லேத், மில்லிங், டீசல், பெற்றோல் மெக்கானிக் வேலைகள் பழகுவதற்கு பயிலுநர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வமுடையோர் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழில் நுட்பக்கல்லூரி அல்லது அதற்குச் சமமான தகுதிச் சான்றிதழ் மற்றும் சுயவிபரம், தங்கள் கிராம சேவையாளரின் நற்சான்றிதழுடன் எதிர்வரும் 12.12.2012 தொடக்கம் 13.12.2012 ஆகிய இரு தினங்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரைக்கும் நேரில் வரவும். நீங்கள் வருகைதர வேண்டிய முகவரி: முகாமையாளர், லக்ஷ்மி இன்சினியறிங், இல.105 இராஜவீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 567 0256.

---

கொழும்பு - கல்கிசையில் அமைந்துள்ள பதிப்பகம் ஒன்றுக்கு KORD மைண்டரும், உதவியாளரும் தேவை. தொடர்புகளுக்கு 071 530 7552.

---

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு குழந்தை ஒன்றைப் பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:077 484 3932.

---

கொழும்பில் தங்கியிருந்து வீட்டில் வேலை செய்வதற்கு நடுத்தர வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 077 298 5299, 077 994 7419.

---

97 வருட காலமாக கட்டட நிர்மாணத்துறையில் முன்னணி வகிக்கும் ஒரு நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதிகளுக்கான வெற்றிடம் உண்டு. தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதோடு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். salaxy commisisiont allowances மேலதிகமாக வழங்கப்படும். தொடர்புகளுக்கு: e-mail yourcv:ruban@vajirahouse.net தொலைபேசி இலக்கம்: 071 453 6624.

---

நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 075 430 2667.

---

வவுனியா - தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள கணக்காளர் நிறுவனம் ஒன்றிற்கு 30 - 40 வயதிற்கு இடைப்பட்ட கணனி வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. ஆர்வமுடையோர் நேரில் வரவும். வரவேண்டிய முகவரி கலீல்ஸ் எக்கவுண்டிங், 48/1, தர்மலிங்கம் வீதி, வவுனியா, தொ.பே.இல 024 222 1001, 071 484 3770.

---

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு தேநீர் தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ள ஒருவர் தேவை.தங்குமிட வசதி உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.இல: 077 224 7505, 021 5685516.

---

தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு ஆண் பணியாளர்கள்களுக்கான வெற்றிடம் உண்டு. 18 தொடக்கம் 55 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. வேதனம் 25,000 ரூபா, 35,000 ரூபா, 40,000ரூபா. உணவு தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு: 077 303 3803.

# ஊழலில் மிதக்கும் நகரசபை; தவிசாளரின் பதவி பறிபோகுமா?

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபையில் தவிசாளர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்ததன் பிரகாரம், அவரை தவிசாளர் பதவியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கையை தமிழரசுக் கட்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் புதிய தலைவரை 10ஆம் திகதிக்குள் நியமிக்குமாறு சபை ஆளும்கட்சி உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், இது தொடர்பாக ஆராயும் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தவிசாளர் உட்பட நாடளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக்கட்சி உறுப்பினரான கனகசபை உள்ளிட்ட நகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் இதில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சபையின் புதிய தலைவரை எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர், தான் அடுத்தவருடம் 8ஆம் மாதம் இப்பதவியிலிருந்து விலகுவதாகவும் அத்துடன் வெளிநாடு செல்லவுள்ளதால் அதுவரை தான் கடமையில் இருப்பதாக தெரிவித்தார். எனினும் இதனை ஏற்றுக்கொள்ளாத தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இவரை நீக்கி புதிய தலைவரை நியமிக்குமாறு கேட்டுள்ளனர். இதற்கு பதிலளித்த கட்சியின் உயர் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் அவரைப் பதவி விலகுமாறு பணித்தனர்.

இதேவேளை பருத்தித்துறை நகரசபை ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையே பல மனக்கசப்புக்கள் இடம் பெறுவதாகவும், ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஒருவர் மீது ஒருவர் சுமத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே சிலர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கூட்டத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் இடம்பெறுவது தடுக்கப்படவேண்டும் எனவும் தமக்குள்ளே விவாதம் செய்யும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஆளும் கட்சி உறுப்பினரொருவரையும் பதவியிலிருந்து விலக்குவற்கான கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை இவர்மீது முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்தே மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

# இலங்கைப்பணிப்பெண் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

குவைத்தில் Sabahiya பகுதியில் பணிப்பெண்ணாக கடமை புரிந்த இலங்கைப் பெண் ஒருவர் மாத்திரைகளை உட்கொண்டு விட்டு மாடியில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இவர் தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் குவைத் பொலிஸார் இவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. எனினும் குறித்த பெண் இலங்கையின் எப்பகுதியைச் சேர்ந்தவர் இவரது விபரங்கள் மற்றும் இவர் தற்கொலை செய்ய முயற்சித்தமைக்கான காரணங்கள் எவையும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் இயல்புநிலைக்கு குந்தகம்; மன்னார் ஆயரின் கருத்துக்கு கண்டனம்



(கொழும்பு)

யுத்தத்துக்குப்பின்னர் இயல்புநிலைக்குத்திரும்பும் நிலையில் மன்னார் ஆயர் அதற்கு சற்றும் பொருத்தமில்லாத கருத்துக்களை வெளியிட்டுவருவதாக அரசுத்தரப்பில் கவலை வெளியிடப்பட்டிருக்கிறது.

அவுஸ்ரேலியாவுக்கு படகுகள் மூலம் அகதிகளாக செல்வோர் திருப்பியனுப்பப்படக் கூடாது.

அவ்வாறு திருப்பியனுப்பப்படுவோர் இலங்கையில் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்று மன்னார் ஆயர், அவுஸ்ரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தமையை அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

வடக்கு கிழக்கில் இருந்து அகதிகளாக செல்வோர் மீண்டும் திருப்பியனுப்பப்படும் போது அவர்களுக்கு பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுவதாக ஆயர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில் ஆயரின் கருத்து, தொடர்பில் அரசாங்கம் கவலை கொள்வதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவோர் உண்மையான அகதிகள் அல்லர். அவர்கள் பொருளாதாரத்தை நோக்காக கொண்டு அங்கு செல்பவர்களாவர்.

நாடு இயல்புநிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கையில் ஆயரின் இந்தக்கருத்து பொருத்தமற்றது என்று கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

# தடம்மாறிப் பயணிக்கும் சம்பந்தன்; கூட்டமைப்புக்கு எதிராக கிளம்பும் எதிர்ப்பு



(புதுக்குடியிருப்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பு ஓர் பயங்கரவாத இயக்கமென்றும் அந்த இயக்கமானது மேற்கொண்ட பாரதூரமான நடவடிக்கை அழிவுகளினால்தான் தமிழ்மக்கள் அழிவைத்தேடிக் கொண்டதாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்தானது, தேசியவாத அபிமானிகள் மத்தியிலும் புலிகள் அமைப்பின் விசுவாசிகளிடத்திலும் பலத்த விசனத்தையும் புகைச்சலையும் கிளப்பிவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் இடம் பெற்ற 2013 வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது, சம்பந்தன் உரையாற்றிய மேற்படி கருத்தானது, அவரது குத்துக்கரண அரசியலையும், ஒரு கொள்கை இல்லாத வழி நடத்தல்களை வெளிப்படுத்துவதாகவும், மக்கள் மத்தியில் பல விதமான அபிப்பிராயங்கள் மேலெழுந்துள்ளதை அறியமுடிகிறது.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் புலிகள் அதை ஒருபோதும் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் இதனால்தான் புலிகள் அழிவடைந்தனர் எனக் கூறும் சம்பந்தன், அப்படிப்பட்ட புலிகள் அமைப்புடன் எதற்காக 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் புலிகளின் ஆதரவுடன் நிற்கச் சம்மதித்தனர் எனவும், இச்செயற்பாடானது சம்பந்தனும் அவரது கூட்டமைப்பும் பயங்கரவாதிகளுக்கு துணை போனதாகவே அமைகிறது என்றும், இவர்களும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டியவர்களே என கூட்டமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் சில மக்கள் தங்களுக்குள்ளே கொந்தளிப்பதாகவும் மேலும் தெரியவருகிறது. (138)

# அம்பாறையில் நில அதிர்வு

(அம்பாறை)

அம்பாறையில் நேற்று முன்தினம் பிற்பகலில் சிறிய அளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. வடிநாகலை, தேவாலஹிந்த மற்றும் பல்லங்கல பகுதிகளில் இந்த நில அதிர்வுகள் உணரப்பட்டன. இது தொடர்பாக புவி சரிதவியல் மற்றும் சுரங்க தொழில் திணைக்களம் இது மனிதர்களின் செயற்பாடுகளால் ஏற்பட்டவை எனத் தெரிவித்துள்ளது.

சுரங்க தொழில் திணைக்களத்தின் தலைவர் என்.பி.விஜயாநந்த இதனைத் தெரிவித்தார். அண்மைக்காலமாக மன்னாரில் இவ்வாறான நில அதிர்வு சம்பவங்கள் உணரப்பட்ட நிலையில், அங்கு விசேட கருவிகள் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

இங்கு பதிவாகும் நில அதிர்வுகள் பாரிய சத்தத்துடன் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கையாக ஏற்படுகின்ற நில அதிர்வுகளின் போது இவ்வாறான சத்தங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்று அவர் குறிப் பிட்டுள்ளார்.

எனவே இது மனித செயற்பாடுகளால் ஏற்படும் அதிர்வுகளாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டொல்பின் வாகனம் அதிகாலையில் கடத்தல்

(கொழும்பு)

கெலிஓயா - கலுகமுவ பகுதியில் 28 இலட்சம் ரூபா பெறுமதியான டொல்பின் ரக வானொன்று நேற்று அதிகாலை கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பேராதனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வான், உரிமையாளரின் வீட்டின் முன்னால் பிரதான பாதையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் பேராதனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜாலிய ஷீன்கந்த தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவக்கும் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், கௌரவம் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம்.

**45 முதல் 51 வரையான வினாக்களுக்குப் பின்வரும் பந்தியை வாசித்து விடைதருக.**

அன்று சவனியினுடைய பாடசாலையில் ஒரு விசேட நிகழ்ச்சி. இலங்கைக் கொடியை ஏற்றும் விழாவிற் கிராமத்துப் பிரமுகர்களுள், சிலர் அதாவது பாடசாலை அதிபர் ஜயதிலக, டாக்டர் இராமநாதன், கிராம அலுவலர் மரிக்கார் ஆகியோர் கலந்துகொண்டனர். தத்தமது இனத்துக்குச் சிறப்பான ஆடைகளை அணிந்து சவனி, இராமன், மொஹமட், கமலினி ஆகியோர் தேசிய கீதத்தைப் பாடினார்கள், பாடசாலைப் பிள்ளைகள் அனைவரும், கிராம மக்களும், ஆசிரியர்களும் அந்த வைபவத்திலே கலந்துகொண்டனர். எல்லோருடைய கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. சமாதானமும், சகோதரத்துவமும் எத்துணை சிறப்புடையன என்பது எல்லோருடைய மனதிலும் தோன்றியிருக்க வேண்டும்.

45. கிராமத்துப் பிரமுகர்கள் ஒன்று கூடியதன் நோக்கம்.
   1. கிராம அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாட
   2. தேசிய கீதம்பாடி அதனை மதிப்பதற்கும் போற்றுவதற்கும்
   3. தேசியக் கொடியை ஏற்றும் நிகழ்வில் கலந்துகொள்ள

46. அந்த விழாவில் கலந்துகொண்டோர் தொடர்பான கூற்றுக்களில் தவறானது
   1. கிராமத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் யாவரும் கலந்துகொண்டனர்
   2. பல்வேறு இனங்களைச் சேர்ந்தோர் மட்டும் கலந்துகொண்டனர்
   3. ஒரே மதத்தைச் சேர்ந்தோர் கலந்துகொண்டனர்

47. மொஹமட் என்பவர் அணிந்திருந்த ஆடையைக் கருத்திற்கொண்டு அடையாளம் காண வேண்டின், பின்வருவனவற்றுள் எது பொருந்தும்.
   1. அவர் வேட்டி சால்வை அணிந்திருப்பார்
   2. அவர் குல்லா போட்டிருப்பார்
   3. அவர் நீளக்காற்சட்டையும், சப்பாத்தும் அணிந்திருப்பார்

48. அவர்கள் கண்களில் கண்ணீர் வரக்காரணம்
   1. எல்லா இன மதத்தவரும் ஒற்றுமையாக ஒன்றுகூடி செயலாற்றியமை
   2. நீண்ட நாட்களின் பின் எல்லோரும் ஒன்று சேர்ந்த சந்தோசம்
   3. விழாவில் ஏற்பட்ட நெருக்கடியில் ஏற்பட்ட வேதனை

49. மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியின் வேகத்திலும் இருமடங்கு வேகத்தில் செல்லும். ஒன்றரை மணித்தியாலத்தில் லொறி 45 கிலோமீற்றர் தூரம் சென்றது. அரை மணித்தியாலத்தில் மோட்டார் சைக்கிள் எவ்வளவு தூரம் சென்றிருக்கும்?
   1. 15 கிலோமீற்றர்
   2. 30 கிலோமீற்றர்
   3. 45 கிலோமீற்றர்

50. ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டோரின் தொகையை அறிவதற்காக அவர்களது ஒரு கையை உயர்த்துமாறு கூறப்பட்டபோது 72 கைகள் உயர்த்தப்பட்டன. ஆனால் சிலர் இரண்டு கைகளையும் உயர்த்தியுள்ளனர் எனத் தெரிய வந்தது. இரண்டு கைகளையும் உயர்த்தியோர் எண்ணிக்கை 15 ஆயின், அக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் எத்தனை பேர்?
   1. 42   2. 36   3. 57

51. பேருந்தில் நண்பர்களுடன் பயணம் செய்த ஒருவர் பேருந்தின் நடத்துநரிடம் ரூபா 150.00 இனைக் கொடுத்து நான்கு பயணச் சீட்டுக்களை வாங்கினார். நடத்துநர் அவருக்கு 30.00 ரூபாவைக் கொடுத்து சில்லறையாக ரூபா 8.00 இனைப் பெற்றுக் கொண்டார் எனின், ஒரு பயணச் சீட்டின் பெறுமதி என்ன?
   1. ரூபா 128.00   2. ரூபா 32.00   3. ரூபா 158.00



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 18



S.T.திலக்

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(மகா இலுப்பலம, இந்தியா, மகாவலி கங்கை, வைரவிழா, வெண்புறா)

01. சமாதானச் சின்னமாகக் கருதப்படும் பறவை எது
..............................................................

02. இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாடு எது?
..............................................................

03. இலங்கையின் மிக நீளமான நதி எது?
..............................................................

04. 60 ஆவது ஆண்டு நிறைவு விழா என்பது எப்படி அழைக்கப்படும்?
..............................................................

05. நெல் ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம் எது?
..............................................................

**இரக்கம், இறக்கம் ஆகிய சொற்களை வைத்துப் பொருள் விளங்க வசனம் அமைத்து எழுதுக.**

06. ..............................................................


07. ..............................................................

**பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் இடுக.**

08. புல்லாங்குழல் ஓர் இசைக்கருவி அல்ல. (..................)
09. தினகரன் என்பது ஒரு பத்திரிகை ஆகும். (..................)
10. காற்று வீசும் திசையைக் காட்டுவது காற்று வேகமானி. (..................)
11. கனவுரு ஒன்றின் எல்லா முகங்களும் சதுரவடிவானவை. (..................)
12. இருளானது ஒளியைப் போக்கக்கூடியது (..................)
13. பதியமிடுவதன் மூலமே புதிய தாவரங்கள் பெறப்படுகின்றன (..................)
14. படித்தவர்கள் அனைவரும் அரசாங்க உத்தியோகம் செய்கிறார்கள் (..................)
15. இலங்கையின் தலைநகரம் கொழும்பாகும் (..................)
16. இலங்கையின் தேசியப் பறவை மயில் (..................)
17. விளிம்பிக்காய் தண்டிலே காய்க்கும் (..................)

பின்வரும் வினாக்கள் தொடர்பாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தாவரங்கள் எந்த வகையைச் சார்ந்தன என்பதை உரிய கூட்டிலே அடையாளத்தை இட்டுக் குறிப்பிடுக.

18. வெண்டி ........
19. மா ........
20. அறுகு ........
21. குப்பைமேனி ........
22. தென்னை ........
23. பாகல் ........
24. கோரை ........
25. தேயிலை ........
26. புடோல் ........

27. 
அருகே உள்ள பெட்டியுள் அவதானிக்க முடியாத பொருளை உள்ளடக்கிய விடை.
1. பஞ்சு, சுத்தமான வெள்ளைத்துணி, ஓடிக்கோலோன்
2. கத்தரிக்கோல், சாவணம், திருவுப்பலகை
3. பனடோல், குளுக்கோஸ், டெற்றோல்

"எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்படல் வேண்டும்"

28. என்பதற்கமைய சு.பாலசுப்பிரமணியம் என்னும் பெயரை எழுதுக.


29. என்பதற்கமைய 120171 என்னும் எண்ணை எழுதுக.

**30 ஆம், 31 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

30 கீரி : கீரிப்பிள்ளை | வேம்பு : ?
1. வேப்பம் குட்டி 2. வேப்பங் கன்று 3. வேப்பம் விதை

31. ஒளி : | திறப்பு : கோர்வை
1. ஒளிக்கதிர் 2. ஒளிப்பிளம்பு 3. ஒளிக்கற்றை

32. தாவரங்கள், விலங்குகள், தென்னை என்பவற்றுக்கிடையேயான தொடர்பினைக் காட்டுவதற்காக வரையப்பட்ட உருவை கீழே காண்கிறீர்கள். இந்த உருவில் வட்டத்தினால் குறிப்பிடப்படுவது யாது?



1. தாவரங்கள்
2. விலங்குகள்
3. தென்னை



சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

33. இலங்கையில் தற்போது பயன்பாட்டில் உள்ள காகத்தாள்களாவன 1000, 500, 200, 100, 50, 20, 10 ரூபாக்களாகும். கணபதி 6790 ரூபா வைத்துள்ளார். அவர் இதனை மிகவும் குறைவாக உள்ள தாள்களாக வைத் திருக்க எண்ணினார். அவரிடம் எத்தனை காகத்தாள் இருக்கும்.

........

34. 5 மாம்பழங்களினதும், 5 தோடம்பழங்களினதும் விலை ரூபா 120.00, 5 மாம்பழங்களினதும், 7 தோடம்பழங்களினதும் விலை ரூபா 160.00. ஒரு மாம்பழத்தின் விலை என்ன?

........

35. டிசெம்பர் - 25 — ஜனவரி - 07 — ஜனவரி - 19 — ஜனவரி - 31 — [ ]

மேலே தரப்பட்டுள்ள மாதம், திகதிக்கு அமைய வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய மாதம், திகதியை எழுதுக. ........

36 வரன் கிழக்கு நோக்கி நின்று 5 மீற்றர் முன்னோக்கிச் சென்றபின் இடது பக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச் சென்று பின் வலதுபக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச்சென்றான். இதனைக் அருகேயுள்ள கூட்டினுள் வரைந்து காட்டுக.

37. 1.132, 1.004, 1.5, 1.148 இல் மிகவும் பெரிய எண் எது?

........

38 * = X இனையும் / = ÷ இனையும் குறிப்பின் 5 * 6/3 இன் பெறுமானத்தை எழுதுக.

........

39. "கன்னியர்" என்னும் சொல்லின் எதிர்ப்பாற் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

........

40. "கூந்தல்" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

........

41. பெயர்ச்சொல் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

........

42. "நறுமணம்" என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

........


43. "பொடி" என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

........

44. வினையெச்சச் சொல் ஒன்றை எழுதுக.

........

# அணு உலை திட்டத்திற்கு எதிர்ப்பு; கூடங்குளத்திற்கு அடுத்தபடியாக ஆந்திரா



கூடங்குளத்திற்கு அடுத்தபடியாக ஆந்திராவில் அமைய உள்ள அணுமின் நிலையத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள கொவாடா கிராமத்தில் 6 அணு உலைகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேரை வேறு இடத்தில் குடியமர்த்திவிட்டு நிலத்தை எடுக்க மத்திய அரசு முயற்சித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரனஸ்தலம் என்னும் இடத்தில் அணு உலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெறும் இந்தக் கூட்டத்தில் மத்திய எரிசக்தித் துறையின் முன்னாள் செயலர் இ.ஏ.எஸ். சர்மாவும் கலந்துகொண்டு பேசுவார் என தெரிகிறது.

ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் சூரிய சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு மாறியுள்ள நிலையில், மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய அணுமின் நிலையத் திட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும் என்று சர்மா வலியுறுத்தியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# ஆசிரியரின் பாலியல் தொந்தரவு; மாணவி தற்கொலை



ஆசிரியர் கொடுத்த பாலியல் தொந்தரவால் ஆந்திர மாநில மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அம் மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திரா மாநிலம் கரீம் நகர் மாவட்டம் கொல்லக்கூடம் கிராமத்தைச் சேர்ந்த சந்தியா(வயது 15) என்ற இம்மாணவி 9ஆம் வகுப்பு படிக்கிறார்.

பள்ளியில் ஹிந்தி ஆசிரியராக பணி புரிந்த லட்சுமண சுவாமி என்பவர் இவருக்கு பாலியல் ரீதியாக பல தொந்தரவுகளைக் கொடுத்து வந்துள்ளார்.

இதனால் மனமுடைந்த சந்தியா பெற்றோரிடம் தெரிவித்தார். ஆனால் சந்தியா ஆசிரியரை அழைத்து ரகசியமாக கண்டியுங்கள், தலைமை ஆசிரியரிடம் புகார் செய்தால் எனது மானம் போய் விடும். தொடர்ந்து படிக்க முடியாது என்று கெஞ்சினார்.

ஆனால் பெற்றோர்கள் அதனை கேட்கவில்லை. இதனால் வேதனை அடைந்த சந்தியா நேற்று முன்தினம் வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.



ஜனாதிபதி மாளிகையில், நடந்த கூட்டுறவு சங்கங்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றிய இறுவட்டை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட, மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் பெற்றுக் கொண்டார்.

# கர்நாடகத்திற்கு நியாயம் வேண்டும் தவறின் சாகும்வரை உண்ணாவிரதம்

## தேவ கவுடா மிரட்டல்


காவிரி நதி நீர் விவகாரத்தில் கர்நாடகத்துக்கு நியாயத்தைப் பெற்றுத்தர மாநில அரசு தவறினால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன் என்று முன்னாள் பிரதமரும் மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் தலைவருமான தேவ கவுடா மிரட்டியிருக்கிறார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய அவர், காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவரான பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திக்க அனுமதி கோரியிருக்கிறேன். அவரிடம் மாநில நீர் நிலவரம் குறித்து விவரிக்க இருக்கிறேன். இதே போல் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் ஹரீஷ் ராவத்திடமும் பேச இருக்கிறேன்.

இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க லோக்சபாவில் 4 முறை கட்டளை கொடுத்து விட்டேன். ஒருமுறை இந்த விவகாரம் தொடர்பாக பேச எனக்கு அனுமதி கொடுத்தனர். ஆனால் தமிழக எம்.பிக்கள் என்னைப் பேசவிடவில்லை.

காவிரி நதிநீர் விவகாரத்தில் கர்நாடகத்துக்கான நியாயத்தை மாநில அரசு பெற்றுத் தராவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதான தேவகவுடா தெரிவித்துள்ளார்..

# காவிரி விவகாரம் தமிழக அரசு ஆலோசனை



காவிரி விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா, நேற்று காலை அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

காவிரி ஆணையம் உத்தரவிட்டபடி, இந்த மாத இறுதிக்குள் தமிழகத்திற்கு 12 டிஎம்சி காவிரி நீரை வழங்க இயலாது என்று கர்நாடக முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் தெரிவித்துள்ளார்.

காவிரி நதிநீர் விவகாரம் தொடர்பாக நதிநீர் ஆணையத்தை அணுகப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் காவிரி கண்காணிப்பு குழு உத்தரவை கர்நாடகா ஏற்க மறுத்துள்ளது பற்றி தமிழக முதல்வர், இன்று அமைச்சர்களுடன் விவாதிக்க வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது.

# மனமுடைந்து போன இந்தியர் ரயிலில் விழுந்து தற்கொலை



தாயகத்துக்கு திருப்பி அனுப்ப மறுத்ததால் மனமுடைந்து போன இந்தியர் ஒருவர், துபாய் ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

தான் வேலை பார்த்த நிறுவனத்தின் நிர்வாகி, இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப மறுத்ததால் வெறுத்து போன எச்.யு.எம் என்ற இந்தியர், துபாய் மெட்ரோ ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து துபாய் பொலிஸ் அதிகாரி கூறுகையில், தற்கொலை செய்து கொண்ட நபர் மது அருந்தியுள்ளார். ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதால், அவரது உடல் அடையாளம் காண முடியாத அளவுக்கு சேதமடைந்து இருந்தது.

இவரது நண்பர் தெரிவித்த அடையாளத்தின் பேரில் அவர் இந்தியர் என்பது தெரிந்தது. இரண்டு ஆண்டுகளாக இவர் ஊருக்கு திருப்பி அனுப்பும்படி நிறுவனத்தை வற்புறுத்தி வந்தார்.

தன்னுடைய விருப்பம் நிறைவேறாத காரணத்தால் தற்கொலை முடிவுக்கு வந்துள்ளார் என்று தெரிவித்தார்.

சமீபகாலமாக வளைகுடா நாடுகளில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ இரகசியங்கள் கடத்திய நபர் கைது

இந்திய இராணுவ இரகசியங்களை இலங்கை வழியே பாகிஸ்தானுக்கு கடத்த முயன்றதாக கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது கெய்யப்பட்டார்.

தமிழகத்தின், தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த தமீம் அன்சாரியை கடந்த செப்டம்பர் 17ஆம் திகதி திருச்சியில் கியூ பிரிவு பொலிஸ் கைது செய்தது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் மூலமாக இந்திய இராணுவ இரகசியங்களை கடத்தியதாக தமீம் அன்சாரி மீதான குற்றம் சுமத்தப்பட்டது.

மேலும் தமீம் அன்சாரியை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று கியூ பிரிவு பொலிஸ் தரப்பில் பரிந்துரைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்ய பொது மற்றும் சட்டத் துறைச் செயலர் கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி, தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# சட்ட வழிமுறைகள்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளவுக்குமீறிய பொதுமக்கள் இழப்பு எண்ணிக்கையை வெளியிட்டுள்ளதாக ஐ.நா. மீது கண்டனம் தெரிவித்து வெளியிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் அறிக்கையில் சாத்தியமானவரை முதல் முறையாக பொதுமக்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முந்தைய சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் சேவையில் நீண்ட தொடர்புகளைக் கொண்டு களத்தில் பணியாற்றியவர்கள் என்று அரசினால் அடையாளம் காணப்பட்டவர்கள் எண்ணிக்கையை தெரிவித்தபோது அவர்கள் பரிகசிக்கப்பட்டார்கள்.

வெளிவிவகார அமைச்சின் அறிக்கைகூட முன்னர் அரசாங்கம் வெளியிட்ட "பொதுமக்கள் பாதிப்பு பூச்சியமாக இருக்கும்படி நடத்தப்பட்ட போர்" என்கிற அறிக்கைக்கு முற்றிலும் விரோதமாக அமைந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் (யு.என்.எச்.சி.ஆர்) அரசாங்கத்தின் செயல் திட்டத்தின் ஒருபகுதி ஆயுதப் படைகளின் குற்றச்சாட்டின் தன்மையைப் பரிசீலிக்கும் கட்டாயத்துக்கு உட்பட்டிருந்தது. அதில் ஒரு விடயம் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளுடன் போட்டி போடவேண்டியிருந்தது. மற்ற விடயம் அவர்கள் பொதுமக்கள் அல்ல புலிகள் என்று விவாதிக்க வேண்டியிருந்தது. அரசாங்கம் நம்பத்தகுந்ததையும் ஏற்றுக்கொள்ளத் தக்கதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அரசாங்கமும் மற்றும் ஆயுதப்படையினரும் ஒரேசமயத்தில் பத்திரிகைகளுக்கு எதிராக இராணுவத்தால் தொடரப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளின் சாதகமான விளைவுகளை அவதானிக்க வேண்டும். தீர்ப்பானது இராணுவத்துக்கு எதிராக வருமானால், அவற்றை சரி செய்வதற்கான பொறிமுறைகளை அரசாங்கம் ஏற்படுத்துமா? அல்லது அதற்கு ஒருபடி மேலே சென்று பொதுமக்களின் சுற்றாடலில் இருந்து எவ்வளவு சாத்தியப்படுமோ அவ்வளவு தொகையான ஆயுதப்படையினரை அங்கிருந்து வெளியேற்றுமா.?

# அமெரிக்கத் தாக்குதலில் முக்கிய தளபதி பலி; அல்கொய்தா இயக்கத்துக்கு பின்னடைவு



அமெரிக்காவின் அதிரடித் தாக்குதலில் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தளபதி படுகொலை செய்யப்பட்டார்.

பாகிஸ்தானின் வடமேற்கே உள்ள வஜிரிஸ்தான் பகுதியே அல்கொய்தா தீவிரவாதிகளின் புகலிடமாக அமைந்துள்ளது.

இங்கு தீவிரவாதிகளை அழிப்பதற்காக அமெரிக்கா அடிக்கடி வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் சமீபத்தில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் முக்கிய தளபதி அபு ஜாயித் உட்பட 11 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா கடந்த ஜுன் மாதம் நடத்திய தாக்குதல்களில் அல்கொய்தா இயக்கத் தளபதியான அபு யாஹ்யா அல் லிபி உயிரிழந்ததைத் தொடர்ந்து, அந்த இடத்தில் அமர்த்தப்பட்டவர் தான் இந்த அபு ஜாயித்.

அபு ஜாயித், அமெரிக்க தாக்குதல்களில் பலியாகி இருப்பது அல்கொய்தா தீவிரவாத இயக்கத்துக்கு பெருத்த பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாக சர்வதேச பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் இந்தத் தாக்குதல்களை பாகிஸ்தான் உறுதி செய்துள்ளது.

இது குறித்து வடக்கு வஜிரிஸ்தானில் உள்ள பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் கூறுகையில், அமெரிக்கா நடத்திய தாக்குதல்களை அறிவோம். அல்கொய்தா இயக்கத்தின் மூத்த தளபதி பலியானதாகவும் எங்களுக்கு தெரிய வந்திருக்கிறது. ஆனால் பலியானது யார் என்பதை எங்களால் உறுதி செய்ய முடியாது எனக் கூறினர்.




இஸ்ரேல் விமானப்படையின் தாக்குதலில் இறந்த ஹமாஸ் விமானப்படைத் தலைவர் அகமது ஜாபரியின் வீட்டிற்கு சென்ற ஹமாஸின் தலைவர் மாஷல் (இடது), ஹமாஸ் பிரதமர் இஸ்மாயில் ஹனீஸ், ஆதரவாளர்களை பார்த்து உரையாடினார்கள்.

## புயலின் கோரத் தாண்டவத்துக்கு 600 பேர் பலி

பிலிப்பைன்ஸில்புரட்டிப் போட்ட போபா புயலுக்கு, இதுவரையிலும் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர்.

தற்போது பிலிப்பைன்ஸின் வடபகுதியில் 250 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டிருக்கும் இப்புயல், மீண்டும் தாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது மணிக்கு 250 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசும் என்றும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வாரம் தாக்கிய புயலின் தாண்டவத்திலிருந்தே மக்கள், இன்றளவும் வெளி வராத நிலையில் சிக்கித் தவிக்கின்றனர்.

பல கிராமங்கள் அடியோடு நாசமாகி விட்டதால், நிவாரண பணிக்கு சர்வதேச உதவியை பிலிப்பைன்ஸ் நாடு கேட்டுக் கொண்டுள்ளது.



## ஈரான் மீதான தடை அமெரிக்கா புதிய அறிவிப்பு




ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா தளர்த்தியுள்ளது.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக சந்தேகம் கொண்ட அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் அந்நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

குறிப்பாக ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து அமெரிக்கா வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் விடுத்துள்ள அறிக்கையில், ஈரானின் அணு ஆயுத திட்டம் குறித்த பிரச்சினைகளுக்கு முழுமையாக தீர்வு காணப்படும் வரை அமெரிக்காவும், சர்வதேச சமுதாயமும் அந்நாட்டுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுக்கும்.

எனினும் சீனா, இந்தியா உள்ளிட்ட 20 நாடுகள் ஈரானிலிருந்து அடுத்த 180 நாள்களுக்கு மட்டும் எண்ணெய் இறக்குமதி செய்து கொள்ளலாம். இது தொடர்பாக ஈரான் மீதான எண்ணெய் இறக்குமதித் தடையில் விலக்கு அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

## ஹமாஸ் இயக்கத்தின் 25 ஆவது ஆண்டு தினம்

ஹமாஸ் இயக்கம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடி கொண்டாடியுள்ளனர்.

இவ்விழாவை கொண்டாடுவதற்காக பலஸ்தீனத்தை சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் அல் கட்டியா சதுக்கத்தில் மிகப் பெரிய மேடையின் அருகே ஒன்று கூடினர்.


இவர்கள் அனைவரும் பச்சை நிறக் கொடிகளை ஏந்தியவாறு கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பங்கு பெறுவதற்காக ஹமாஸ் இயக்கத்தின் நாடு கடந்த தலைவர் காலீத் மெஷால் எகிப்திலிருந்து காஸாவுக்கு நேற்று முன்தினமே வந்து சேர்ந்தார்.

தனது பாதுகாப்பையும் பொருட்படுத்தாது முதன் முறையாக காஸாவுக்கு விஜயம் செய்தார் மெஷால்.

ஹமாஸ் இயக்கம் தனது அருகிலுள்ள நாடுகளின் முஸ்லிம் சமூகங்களுடன் சகோதரத்துவத்தைப் பேணி வருகின்ற போதும் முன்னாள் எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் எதிரியாகக் கருதப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## ரொக்கெட் ஏவுவதை ஒத்திவைத்தது வட கொரியா



வடகொரியா ரொக்கெட் ஏவுவதை ஒத்திவைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.


வடகொரியா முதலில் ஏவிய ரொக்கெட் முயற்சி தோல்வியில் முடிந்ததை அடுத்து, தனது இரண்டாவது ரொக்கெட்டை இன்றிலிருந்து 22 ஆம் திகதிக்குள் அனுப்ப திட்டமிட்டிருந்தது.

ஆனால் தொழில்நுட்ப காரணங்களால் ரொக்கெட் அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக்வும், ரொக்கெட் அனுப்புவது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கொரிய விண்வெளி குழு விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்கள் ரொக்கெட் அனுப்புவது குறித்து தீவிரமாக செயற்பட்டு வருகிறார்கள்.

மேலும் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி இராணுவ மருத்துவமனையில்



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, பிரெட்டோரியாவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் வாழும் கறுப்பின மக்களுக்காகப் போராடியவர் நெல்சன் மண்டேலா. இதற்காக 27 ஆண்டுகள் சிறைக்காவலில் இருந்த மண்டேலா, கடந்த 1994ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.


ஐந்தாண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகித்த மண்டேலா, அதன் பின்னர் அரசியல் வாழ்வில் இருந்து ஓய்வு பெற்று தனது சொந்த கிராமமான குனுவில் ஓய்வெடுத்து வந்தார். இவரது உடல் நலம் குறித்து இராணுவ மருத்துவர்கள் அடிக்கடி சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மண்டேலா தற்போது பிரெட்டோரியாவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது உடல் நிலை குறித்து தற்போதைய ஜனாதிபதி ஜேக்கப் ஜீமாவின் செய்தி தொடர்பாளர், தென் ஆபிரிக்காவின் ஜனநாயக ஆட்சிக்கு வித்திட்ட எங்கள் தலைவரின் உடல்நலத்தை பேணி, பராமரிக்க அனைத்து உதவிகளும் செய்ய அரசு தயாராகவுள்ளது.

அவரது உடல் நிலையில் கவலைக்கிடமாக எந்த பின்னடைவும் இல்லை. இது அவரது வயது சார்ந்த பிரச்சினை தான். அவர் விரைவில் பூரண நலமடைந்து விடுவார் என்று தெரிவித்துள்ளார்.

# பாடசாலையின் பௌதீக தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிலவுகின்ற பௌதீக வளத் தேவைகள் விரைவில் எம்மால் பூர்த்தி செய்யப்படுமென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உறுதியளித்துள்ளார்.

பாடசாலை பரிசளிப்புவிழா பாடசாலை அதிபர் சிவசுப்பிரமணியம் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றபோது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகளில் நிலவுகின்ற பௌதீக வளத் தேவைகளையும், கற்றல், கற்பித்தல் உபகரணங்களையும் வழங்கிவருகின்றோம்.

அந்த வகையில், இப்பாடசாலை சமூகம் எனக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய நிழற் பிரதி இயந்திரமொன்றையும், பான்ட் வாத்தியக் கருவியையும், வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அவர் இதன்போது உறுதியளித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் கரவெட்டி பிரதேச அமைப்பாளர் செந்தில் நாதன், பாடசாலைகளின் வளர்ச்சி என்பதும், அங்கு கற்கின்ற மாணவர்களின் கல்விமேம்பாடும் ஆசிரியர்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் உளத்தூய்மையுடன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் ஊடாகவே சிறந்த கல்வியை மாணவர்கள் பெற வழியேற்படும்.

1921 இல் ஆரம்பிக்கப்பட்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளின் அதீத பங்களிப்பினால் இன்று தேசிய பாடசாலையாகத் தரமுயர்ந்துள்ளது. ஆனால் 1854 இல் ஸ்தாபிக்கப்பட்ட வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை இன்றும் ஆரம்ப பாடசாலையாக உள்ளமை வேதனைதரும் விடயமாக அமைந்துள்ளது என அவர் இதன்போது தெரிவித்தார்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்களை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உள்ளிட்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கரவெட்டி கோட்டக் கல்விப்பணிப்பாளர் நற்குணலிங்கம், பாடசாலைச் சமூகத்தினர், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவில் இம்முறை 32 பரீட்சை நிலையங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டாயிரத்து 628 பாடசாலை மாணவர்கள் தோற்றவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மக்கள் மீளக்குடியேறி வாழ்ந்து வருவதுடன் கல்வி நிலைகளும் முன்னேற்றம் கண்டுவருகின்றது. இதன்படி பாடசாலை பரீட்சார்த்திளை விட 1267 தனிப்பட்ட பரீடசார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் 12 பரீட்சை நிலையங்களும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 20 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இணைப்பு நிலையங்களில் முல்லைத்தீவில் 7 நிலையங்களும், துணுக்காயில் 6 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மாணவர்கள் நலன்புரி நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் இம்முறை சொந்த இடத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (04)

# சிறந்த தொழில் முயற்சி வவுனியாவில் விருது




வடமாகாணத்தில் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் விழா வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக கைத்தொழில் ஒன்றியங்களின் சம்மேளனம் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் வடமாகாணத்தின் சிறந்த தொழில் முயற்சியாளர்கள், சிறந்த இளம் தொழில் முயற்சியாளர்கள், வடக்கு, கிழக்கில் வளர்ந்துவரும் சிறிய அளவு பெண் தொழில் முயற்சியாளர்கள், மாற்றுத்திறன் படைத்த தொழில் முயற்சியாளர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை வர்த்தக கைத்தொழில் ஒன்றியங்களின் சம்மேளனத் தலைவர் குமார் மல்லவாராட்சி, வவுனியா வளாகத்தின் முன்னாள் முதல்வர் இ.நந்தகுமார், வவுனியா வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர் உவைஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மாடுகளுடன் மோதல் முச்சக்கர வண்டி சேதம்



முல்லைத்தீவு முள்ளியவளை செங்குந்தா வீதிப்பகுதியில் முச்சக்கர வண்டியொன்று கட்டாக்காலி மாடுகளுடன் மோதி பலத்த சேதமடைந்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

குறித்த முச்சக்கர வண்டி முள்ளியவளையிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான வீதிக்குள் செல்வதற்காக சந்தியால் திரும்பிய வேளை வீதியிலிருந்து பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட கட்டாக்காலி மாடுகளுடன் மோதி விபத்திற்குள்ளானது.

இதில் சாரதிக்கும் மாடுகளுக்கும் சேதம் ஏற்படவில்லை எனவும் முக்சக்கரவண்டி பலத்த சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (04)

## பயங்கரவாத...

புடவைகளை எடுத்துவருமாறு பணிக்கப்பட்ட நிலையில் அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்று உடுபுடவைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான மேற்குறிப்பிட்ட 15 பேரும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (02)

## மாநகரசபை...

தகவல் அளிக்கப்பட்டது. துப்புத்துலக்கும் பொலிஸ் பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதோடு ஸ்தலத்திற்கு வந்த யாழ். பதில் நீதவான் திருநாவுக்கரசு சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், மரணம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். சடலம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இறந்தவர் அடையாளம் காணப்பட்டார். இராசலிங்கம் வீதி, திருநகரைச் சேர்ந்த டேவிட் அந்தோனி (வயது - 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இவர் யாழ். மாநகர சபை சிற்றூழியர் என்றும் வலிப்பு நோய் ஏற்படும் ஒருவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தார். (இ)

## தெரிவுக்குழு...

காணப்பட்டது. எனினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்த அடுத்த நாளே தெரிவுக்குழுவின் இறுதித் தீர்மானம் வெளியிடப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு அநியாயமான தீர்மானமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## அரசைக்...

வடிக்கைகள் பொதுமக்களின தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் அமையவேண்டும

நீதிமன்றம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் உள்ள கௌரவம் அற்றுப்போகுமாயின் நாட்டை நிர்வகிப்பதில் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்

அதேவேளை, கடந்த காலத்தில் இராணுவத்தை இரண்டாக பிரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது போன்று, நீதிமன்றத்தை இரண்டாக பிளவுபடுத்தி அரசியல்மயப்படுத்தும் முயற்சிகள் நாட்டிற்குள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது...

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்க இடமளிக்கக்கூடாது என்று வலியுறுத்தி ஜனாதிபதியிடம் அனுப்பப்படவுள்ள ஆவணம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தின்போது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் முக்கிய இடதுசாரிக் கட்சிகளின் உறுபபினர்கள் இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்துசிவலிங்கம் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டும் என்று பிரசாரம் செய்துவருகின்ற நிலையில், அரசாங்கம் அந்த நிலைப்பாட்டை எடுத்துவிடக்கூடாது என்று வலியுறுத்தி தாங்களும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக அமைச்சர் முத்து சிவலிங்கம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் 13 ஆவது திருத்தத்தை நீக்கக்கூடாது என்று கோருகின்ற ஆவணத்தில் கையொப்பமிட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மட்டுப்படுத்தப்பட்ட...


வேண்டும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைப்பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் முடிவை வரவேற்ற அவர் இது நடைமுறைக்கு ஒத்துவராதது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த யூன் மாதத்துக்குப் பின்னர் ஒரே ஒரு கப்பலில் தான் நாம் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளோம். வங்கிக்கடன் கடிதங்களைத் திறக்க முடியவில்லை. கப்பல்களுக்கு காப்புறுதி செய்ய முடியவில்லை. இதனால் கப்பல்கள் பயணிக்க முடியவில்லை. அமெரிக்கச் சட்டத்தின் கீழ் வங்கிகள், நிதி நிறுவனங்கள் தண்டிக்கப்பட வாய்ப்பில்லாத போதும், எமது வங்கிகளான மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் தாம் கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகின்றன.

இந்த வங்கிகள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டால், இலங்கையின் பொருளாதாரமே முடங்கிப் போய் விடும் என்ற அவர்களின அச்சத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கள்வனுக்கு இருக்கும் உரிமைகூட பிரதம நீதியரசருக்கு இல்லையா?

## கேட்கிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

வாழைக்குலைக் கள்வனுக்கு வழங்கும் உரிமை கூட எமது பிரதம நீதியரசருக்கு வழங்கப்படவில்லையென ஜே.வி.பி.யின் செயலாளர் ரில் வின் சில்வா தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வாழைக்குலைத் திருடனுக்கும் விடுதலைக்கான காரணம் கேட்கப்படுவதே சட்டத்துறையின் வழக்கம். ஆனால் எமது பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டு பற்றி அவரது விடுதலைக்கான காரணங்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. இது பிரதம நீதியரசர் மீதான பிரச்சினை மட்டுமல்ல. ஜனநாயகத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலுக்கான முன்னோடி நடவடிக்கையாகும் என்றார்.

# ஆஸி.சென்ற படகு அகதிகள் மனுஸ் தீவுக்கு இடமாற்றம்

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா சென்ற மேலும் ஒரு தொகுதி இலங்கையர்கள் மனுஸ தீவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் நுழைந்த 16 இலங்கையர் உட்பட 20 பேர் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்களுடன் தற்போது மனுஸ் தீவுகளில் மொத்தமாக 67 புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 13 முதல் 16 சிறுவர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரமமான முறையில் அடிக்கடி இவ்வாறு புகலிடக் கோரிக்கையாளர்கள் மனுஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# இன்று கண்காட்சி

(ஆனைக்கோட்டை)

வலிதென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்தும் கண்காட்சியும் பரிசில் வழங்கலும் பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச. செயலக மண்டபத்தில் சமாசத்தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் சிறப்பு விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ந. ஜெயராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து பரிசில் பெற்ற பேச்சுகள், வினாடி விடைப்போட்டி, கவிதை, பட்டிமன்றம் ஆகியன இடம் பெறும். (104)

# டெங்கு நோய் கட்டுப்பாடு; தோப்பில் கருத்தரங்கு



அதிகரித்து வரும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் முகமாக பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கருத்தரங்கு 'டெங்கு ஒழிப்புக் குழுவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை அச்சுவேலி தோப்பு கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடாத்தப்பட்டது.

இதன் போது அதிகரித்து வரும் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தியதுடன் எதிர்வரும் காலங்களில் சுற்றுச் சூழலை துப்புரவாக வைத்திருக்க எடுக்க இருக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எது என்பதையும் மக்களிடம் டெங்கு ஒழிப்புக் குழுவினர் கேட்டு அறிந்து கொண்டனர்.

குறிப்பாக வெற்றுப் போத்தல்கள், இளநீர்கோம்பைகள், மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை இல்லாதொழிக்கவும் இக் கருத்தரங்கில் கூறப்பட்டதுடன், மேலும் வெற்றுக் காணிகளில் குப்பை கொட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் அச்சுவேலி வடக்கு கிராமசேவையாளர் பி.கனிதா, பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்-சிவதர்ஸன், சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்-சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எம்.ஆர்)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று செல்லும் ஆண்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையினை விட அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

முப்பது வருட காலத்திற்குப் பின்னர் இந்த நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் அமால் சேனலங்காதிகர தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை 51 சதவீதமாக பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெற்றுச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்துவதில் பணியகம் ஆர்வமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக பாரசீக குடா நாடுகளுக்கு செல்வதன் மூலம், இலங்கையில் உள்ள அவர்களது குடும்பத்தினர் சமூக பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பணியகத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற ஆண்களை வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுச் செல்வதற்கு ஏற்ற வகையில், பல்வேறு வேலைத் திட்டங்களை தமது பணியகம் மேற்கொண்டு வருவதாக, பணியகத்தின் தலைவர் அமால் சேனலங்காதிகர தெரிவித்துள்ளார்.

# இணையத்தள சேவை; குறைந்தது வரி

இணையத்தள சேவைகளுக்காக தற்போது அறவிடப்பட்டு வருகின்றவரியை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 50 வீதத்தால் குறைக்கவுள்ளதாக




தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கமைய இணையத்தள சேவைகளுக்காக தற்போது அற விடப்படுகின்ற 20 வீத வரியை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10 வீதம் வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இணையத்தள பயன்பாட்டை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். நாட்டில் தற்போது 1.2 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் இணையத்தளம் பயன்படுத்துவதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

# காப்பெற்றாக மாறிய வல்லை – அராலி வீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி எல்லைக்கும் - அராலி பிரதேசங்களுக்குமிடையில் பயணிக்கும் மக்கள் சுமார் 20 வருடங்கள் எதிர்கொண்ட வீதிப் பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

சுமார் 27 கிலோ மீற்றர் தூரத்தினை உடைய டீ 437 இலக்க வீதியே காப்பெற்றாக மாற்றப்பட்டுள்ளது. இவ் வீதி ஊடறுத்துச் செல்லும் வசாவிளான், ஒட்டகப்புலம்,தெல்லிப்பளை பிரதேசங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டதனால் பொதுமக்களது பாவனைக்கு இவ் வீதி தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக வல்லை அராலி பிரதேச மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி ஏற்பட்டது. இந் நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவித் திட்டத்தின் ஊடாக 'வடக்கிற்கான வீதி ஒருங்கிணைப்பு' திட்டத்தின் கீழ் கடந்த வருடம் யூன் மாதம் 13 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

எனினும் இவ் வீதி' ஊடறுத்து செல்லும் வசாவிளான், ஒட்டகப்புலம் போன்ற பல பிரதேசங்கள் இன்று வரை உயர் பாதுகாப்பு வலயமாக தொடர்வதால் புனரமைக்கப்பட்ட வீதி மக்களது ப்ாவனைக்கு விடப்படுமா என்ற கேள்வி எழுப்பப்டுகின்றது. (எம்.ஆர்)

# இஸ்லாத்தை தழுவிய இலங்கைப் பெண்

சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றும் இலங்கையர் இஸ்லாத்தை தழுவியுள்ளார். ஸம்ஸம் தண்ணீரை குடித்தமையினால் குறித்த பணிப்பெண்ணுக்கு நீண்ட காலமாக இருந்து வந்த வலிப்பு நோய் குணமடைந்துள்ளது.

இதனாலேயே பணிப்பெண் இஸ்லாத்திற்கு மாறியுள்ளார். புனித மக்கா நகரிலிருந்து ஸம்ஸம் தண்ணீரை கொண்டு வந்த இந்தப் பணிப்பெண்ணின் எஜமான் முடியுமான அளவிற்கு குடிக்குமாறு தெரிவித்துள்ளார்.

இந்த தண்ணீரை சுமார் இரண்டு வாரங்களிற்கு குடித்துள்ளார். இதனையடுத்து வைத்தியர்களை இந்த பணிப்பெண் சந்தித்த போது நீண்ட காலமாக இருந்து வந்த வலிப்பு நோய் குணமடைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். இதனால் இஸ்லாத்தை தழுவிக்கொண்ட இந்த பணிப்பெண், தனது பெயரை பரீதா எனவும் மாற்றியுள்ளார்.

# புதுடில்லி சென்ற மொடல் அழகி மனநிலை பாதிப்படைந்தார்

புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தில் மனநிலை பாதிக்கப்பட்டவாறு இரண்டு நாட்களாக தங்கியிருந்த இலங்கை மொடல் அழகி நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர் விமானநிலையத்தில் இரண்டு நாட்களாக உணவு, நீர் அருந்தாமல் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த மொடல் அழகி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இவர் மனஅழுத்தத்தினால் தற்கொலைக்கு முயன்றதாக சந்தேகிக்கப்படுகிறது.

25 வயதான இவர் மொடலிங் செய்வதற்காக இந்தியா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இவர் கொழும்பு வரவிருந்தார். ஆனால், இரண்டு நாட்களாக விமானத்தில் ஏறாமல் விமான நிலையத்தில் உணவு, நீர், அருந்தாமலும், தூங்காமலும், யாருடனும் பேசாமலும் தங்கியிருந்தார்.

இவர் மீது சந்தேகமடைந்த பாதுகாப்பு அதிகாரிகள், விசாரித்தபோது அவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

புறத்தோற்றத்தில் பார்க்கும் இவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் வைத்தியர் இதனை உறுதிப்படுத்தவில்லை.

பின்னர் அதிகாரிகள் அவரை அமைதிப்படுத்தி வெள்ளிக்கிழமை இரவு கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

# மன அழுத்தத்திற்குள்ளாகும் பெண்களுக்கு நிவாரணம்

வீட்டிலும், அலுவலகத்திலும் ஏற்படும் பிரச்சினைகளினாலும் வேலைப் பளுவினாலும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு மனோவியல் ரீதியில் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக பயிற்சிப்பட்டதாரிகளுக்கு மனோ தத்துவவியல் தொடர்பாக விசேட பயிற்சிகளை வழங்க மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி மகளிர் விவகார அமைச்சின் கீழுள்ள பயிற்சிப்பட்டதாரிகளில் மனோ தத்துவவியல் பாடநெறிகளை மேற்கொண்ட 65 பட்டதாரிகளை தெரிவு செய்து அவர்களுக்கு மனோ தத்துவவியல் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் பத்தரமுல்லை - தலாஹேன சமூகக் கல்வி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விசேட மனோ தத்துவவியல் பயிற்சிகளை மேற்கொள்ளும் இந்தப் பட்டதாரிகள் பிரதேச செயலக மட்டத்தில் தமது சேவைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.